# பெரோயரின் கேள்விகள்

# அர்மகெதோன் யுத்தம்

## வேத ஆராய்ச்சி தொகை நூல் – 4

# பெரோயரின் கேள்விகள்

# Bereans Questions



# அர்மகெதோன் யுத்தம்

## வேத ஆராய்ச்சி தொகை நூல் IV

---




'நீ வெட்கப்படாத ஊழியக்காரனாயும்

சத்திய வசனத்தை நிதானமாய்ப் பகுத்துப் போதிக்கிறவனாயும் உன்னைத்

தேவனுக்கு முன்பாக உத்தமனாக நிறுத்தும்படி ஜாக்கிரதையாயிரு.''

- II தீமோத்தேயு 2:15

# பெரோயரின் கேள்விகள்

## பொருளடக்கம்


| வ.எண் | தலைப்புகள் | குறிப்பு | பக்கம் |
|---|---|---|---|
| 1. | “நீதியைச் சரிக்கட்டும் நாள்” - இதைக் குறித்த தீர்க்கதரிசனம் | அத்தியாயம் - 1 | 3 |
| 2. | “பாபிலோனின் அழிவு” - கிறிஸ்தவ தேசங்கள் மெனே, மெனே | அத்தியாயம் - 2 | 5 |
| 3. | நீதியைச் சரிக்கட்டும் நாளின் அவசியமும், நியாயமும் | அத்தியாயம் - 3 | 10 |
| 4. | மகா நியாயசபைக்கு முன்பாக பாபிலோன் குற்றஞ்சாட்டப்படுதல் | அத்தியாயம் - 4 | 13 |
| 5. | மகாநீதிமன்றம் முன் பாபிலோன் அவளது குழப்பம் - தேசிய அளவிலானது | அத்தியாயம் - 5 | 16 |
| 6. | மகாநீதிமன்றம் முன் பாபிலோன் அவளது குழப்பம் - மத சம்பந்தமானது | அத்தியாயம் - 6 | 19 |
| 7. | ஜாதிகள் ஒன்றுகூடுதலும், தேவனுடைய கோபாக்கினையின் … தயாராகுதலும் | அத்தியாயம் - 7 | 26 |
| 8. | அறுவடையாளர்களின் கூக்குரல் | அத்தியாயம் - 8 | 35 |
| 9. | கட்டுப்படுத்த முடியாத போராட்டம் உலக ஞானிகளின் சாட்சியங்கள் | அத்தியாயம் - 9 | 38 |
| 10. | உத்தேசிக்கப்பட்ட பரிகாரங்கள் - சமுகம் மற்றும் பொருளாதாரம் | அத்தியாயம் - 10 | 41 |
| 11. | அர்மகெதோன் யுத்தம் | அத்தியாயம் - 11 | 44 |
| 12. | நமது கர்த்தரின் மாபெரும் தீர்க்கதரிசனம் | அத்தியாயம் - 12 | 48 |
| 13. | இராஜ்யம் ஸ்தாபிக்கப்படுதல் மற்றும் அது தன்னை வெளிப்படுத்தும் விதம் | அத்தியாயம் - 13 | 54 |
| 14. | “யோகோவாவின் பாதபடியை மகிமைப்படுத்துதல்” | அத்தியாயம் - 14 | 60 |

# வேத ஆராய்ச்சி
# தொகை நூல் IV மீதான
# பெரோயரின் கேள்விகள்

## அத்தியாயம் 1

### *“நீதியைச் சரிக்கட்டும் நாள்”--இதைக் குறித்த தீர்க்கத்தரிசனம்--காலம் சமீபித்திருக்கிறது”*

(1) What is the "Day of Vengeance" mentioned in prophecy? How is it variously referred to by the Prophets Daniel, Malachi, and Joel, respectively, by the Apostle James and by our Lord? Page 11, par. 1
1. தீர்க்கத்தரிசனத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் “நீதியைச் சரிக்கட்டும் நாள்” என்பது என்ன? தீர்க்கத்தரிசிகளாகிய தானியேல், மல்கியா, மற்றும் யோயேல், அப்போஸ்தலனாகிய யாக்கோபு மற்றும் நம்முடைய ஆண்டவர் மூலமாக வேறு எப்படியெல்லாம் இது குறிக்கப்படுகிறது? **D P. 1 ¶ 1**

(2) Is the Day of Vengeance a national or an individual Judgment? What is the distinction between these? Page 11, par. 2
(2) நீதியைச் சரிக்கட்டும் நாள் தேசங்கள் ரீதியிலான நியாயத்தீர்ப்பாகவோ அல்லது தனிப்பட்ட ரீதியிலான நியாயத்தீர்ப்பாகவோ எப்படிப்பட்ட நியாயத்தீர்ப்பாக இருக்கும்? இவை இரண்டிற்கும் இடையிலான வேற்றுமை என்ன? **D P. 1 ¶ 2**

(3) When, and under what conditions will the Judgment of the world as individuals take place? When is the Judgment of the nations due to begin, according to Scripture? Page 12, par. 1
(3) உலகமானது தனித்தனி நபர்களாக நியாயந்தீர்க்கப்படுவது எப்பொழுது மற்றும் எவ்வித சூழ்நிலைகளில் நிறைவேறும்? வேதவாக்கியங்களின்படி தேசங்களின் மீதான நியாயத்தீர்ப்பு துவங்க இருக்கும் காலம் எது? **D P. 2 ¶ 1**

(4) What is the Word of the Lord unto the nations assembled before Him for Judgment, as proclaimed by the Prophets Isaiah, Jeremiah, and Zephaniah? Page 12, par. 2
(4) தீர்க்கத்தரிசிகளாகிய ஏசாயா, எரேமியா, மற்றும் செப்பனியா மூலம் அறிவிக்கப்பட்டுள்ளபடி தமக்கு முன்பாக நியாயத்தீர்ப்புக்கென கூட்டப்படும் ஜாதிகளுக்கான கர்த்தருடைய வார்த்தை என்ன? **D P. 3 ¶ 1**

(5) What are the evidences that the Day of Vengeance is even now at the doors? Page 13, par. 1
(5) **நீதியைச் சரிக்கட்டுமம் நாள்** தற்பொழுது வாசலருகே சமீபித்திருப்பதற்கான **அறிகுறிகள்** என்ன? **D P. 3 ¶ 2**

(6) What is the purpose of this volume of the Scripture Studies in calling attention to this subject? And to what class are its declarations especially addressed? Page 13, par. 2; Page 14, par. 1
(6) இத்தலைப்பிற்கு கவனத்தை ஈர்க்கும் வேத ஆராய்ச்சியின் இந்தத் தொகை நூலின் **நோக்கம்** என்ன? மேலும், இதன் அறிவிப்புகளின் மூலம் விசேஷமாக அறிவிக்கப்படும் வகுப்பார் யார்? **D P. 3 ¶ 3; P. 4 ¶ 1**

(7) How is the Day of Vengeance related to the benevolent object of its Divine permission? Page 14, par. 2
(7) நீதியைச் சரிக்கட்டும் நாள் என்பது அதன் தெய்வீக அனுமதியின் உதவிகரமான நோக்கத்துடன் எவ்விதமாகத் தொடர்புகொண்டுள்ளது? **D P. 4 ¶ 2**

(8) How does the Prophet Isaiah refer to Christ's second advent? And to what class is the term Edom symbolically applied? Page 14, par. 3, 4
(8) கிறிஸ்துவின் இரண்டாம் வருகையைத் தீர்க்கத்தரிசியாகிய **ஏசாயா** எவ்வாறு குறிப்பிடுகிறார்? மேலும், **“ஏதோம்”** என்ற வார்த்தை எந்த வகுப்பினருக்கு அடையாளமாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது? **D P. 5 ¶ 1, 2**

(9) What is the peculiar fitness of the symbolic name "Edom" in its application to Christendom? And how have the masses sold their birthright of special advantage? Page 15, par. 1; Page 16, par. 1
(9) **"ஏதோம்"** என்ற வார்த்தை கிறிஸ்தவ இராஜ்யங்களுக்கு அடையாளமாகப் பயன்படுத்தப்படுவதில் உள்ள குறிப்பிடத்தக்க பொருத்தம் என்ன? மேலும், ஜனங்கள் எவ்விதமாக தங்களுடைய பிறப்புரிமையாகிய விசேஷித்த சிலாக்கியங்களை விற்றுப்போட்டனர்? **D P. 6 ¶ 1; D P. 7 ¶ 1**

(10) Under what other name is this symbolic Edom referred to in Revelation, in Isaiah, Jeremiah, and Ezekiel? What does Bozrah, the capital city of Edom, represent? What is the meaning of the word Bozrah, and how is this symbolically applied? Page 17, par. 1
(10) இந்த அடையாள ***ஏதோம்,*** வெளிப்படுத்தின விசேஷம், ஏசாயா, எரேமியா, எசேக்கியேல் புஸ்தகங்களில் வேறு எப்பெயரில் குறிப்பிடப்பட்டுள்ளது? ஏதோமின் தலைநகரமாகிய போஸ்றா எதைக் குறிக்கிறது? ***போஸ்றா*** என்ற வார்த்தையின் பொருள் என்ன, மற்றும் இது எவ்வாறு அடையாளமாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது? **D P. 8 ¶ 1**

(11) What is the reply to the Prophet's inquiry, "Who is this that cometh from Edom," etc.? What further inquiry and reply is given in the context. and in Revelation? (Isa. 63:1, 2; Rev. 19:11-16) Page 17, par. 2; Page 18, par. 1
(11) "ஏதோமிலிருந்து . . . வருகிற **இவர் யார்,"** என்ற தீர்க்கதரிசியின் கேள்விக்கான பதில் என்ன? இவ்வசனப்பகுதி மற்றும் வெளிப்படுத்தின விசேஷத்தில் கொடுக்கப்பட்டுள்ள வேறு கேள்விகளும் பதில்களும் என்ன? (ஏசா. 63:1, 2; வெளி. 19:11-16) **D P. 9 ¶ 1, 2**

(12) How is this symbolic treading of the winepress related to the Harvest of the Gospel Age? And what significance in the fact that the "King of kings" is represented as treading the winepress "alone"? Page 18, par. 2, 3
(12) **ஆலை மிதிக்கப்படுகிறதான** இந்த அடையாளம் எவ்விதத்தில் சுவிசேஷ யுக அறுவடையோடு தொடர்புகொண்டுள்ளது? மேலும், "ராஜாதி ராஜாவானவர்" நான் **"ஒருவனாய்"** ஆலையை மிதிப்பதாகக் குறிப்பிடப்பட்டிருப்பதன் முக்கியத்துவம் என்ன? **D P. 10 ¶ 1, 2**

(13) Why is the Day of Vengeance referred to as "the year of recompenses for the controversy of Zion"? Page 19, par. 1
(13) நீதியைச் சரிக்கட்டும் நாள் என்பது "சீயோனுடைய வழக்கினிமித்தம் **பதிலளிக்கும்** வருஷம்" என்று குறிப்பிடப்பட்டிருப்பது ஏன்? **D P. 11 ¶ 1**

(14) In what language do the Prophets depict the Lord's "controversy with the nations," and what will be the ultimate result of the Day of Vengeance? Page 20, par. 1 to 3
(14) கர்த்தருடைய "ஜாதிகளின் மீதான வழக்கை" தீர்க்கதரிசிகள் எவ்விதமாக சித்தரிக்கின்றனர், மேலும் நீதியைச் சரிக்கட்டும் நாளின் **இறுதியான முடிவு** எவ்விதமாக இருக்கும்? **D P. 12 ¶ 1-4**

---

# வேத ஆராய்ச்சி
# தொகை நூல் IV மீதான
# பெரேயாரின் கேள்விகள்

## அத்தியாயம் 2

### ‘‘பாபிலோனின் அழிவு’’--‘‘கிறிஸ்தவ தேசங்கள்’’
### ‘‘மெனே, மெனே, தெக்கேல், உப்பார்சின்’’

(1) In what language is the Doom of Babylon pronounced by the Lord through His Prophet Isaiah? (Isa. 13:1-13; 28:17; compare Rev. 16:14 and Heb. 12:26-29) Page 21
(1) பாபிலோனின் அழிவு குறித்து தேவன் தம்முடைய தீர்க்கத்தரிசியாகிய ஏசாயா மூலம் உரைத்தவைகள் என்ன? (ஏசாயா 13:1-13; 28:17; ஒப்பிடுக வெளிப்படுத்தல் 16:14 மற்றும் எபிரெயர் 12:26-29) **D P. 15 - D P. 16 ¶ 4**

(2) What evidence is there that the various prophecies of Isaiah, Jeremiah, Daniel, and the Revelator refer to a symbolic City rather than to literal Babylon? Page 22, par. 1
(2) ஏசாயா, எரேமியா, தானியேல், மற்றும் வெளிப்படுத்தின விசேஷ எழுத்தாளர் யோவான் ஆகியோர் உரைத்த பல்வேறு தீர்க்கத்தரிசனங்கள் சொல்லர்த்தமான பாபிலோனைக் குறிக்காமல் ஒரு அடையாளமான நகரத்தையே குறிக்கிறது என்பதற்கான ஆதாரம் என்ன? **D P. 16 ¶ 5**

(3) What is the antitype of ancient Babylon? And what is the meaning of the word? What other symbolic names are Scripturally applied to Christendom? Page 22, par. 2
(3) பண்டைய பாபிலோனின் நிஜம் என்ன? மேலும், அந்த வார்த்தையின் பொருள் என்ன? கிறிஸ்தவ தேசங்களுக்கு வேதவசனங்களில் கூறப்படும் மற்ற அடையாளப் பெயர்கள் என்ன? **D P. 17 ¶ 1**

(4) How does the Revelator intimate that this mystical City would not be difficult to discover? Page 23, par. 1
(4) இந்த இரகசியமான நகரத்தைக் கண்டுபிடிப்பது என்பது கடினமாக இராது என்று வெளிப்படுத்தின விசேஷத்தில் யோவான் எவ்வாறு தெரியப்படுத்துகிறார்? **D P. 17 ¶ 2**

(5) What was the double application of the term “Babylon,” as respects the literal city? Describe the manner in which the city was built and protected against invaders? Page 23, par. 2
(5) "பாபிலோன்" என்ற வார்த்தை சொல்லர்த்தமான நகரத்தைப் பொறுத்தமட்டில் இரண்டு விதமாகப் பயன்படுத்தப்படுவது எப்படி? படையெடுப்பவர்களிடமிருந்து பாதுகாப்பதற்காக அந்த நகரம் கட்டப்பட்டிருந்த விதத்தை விவரிக்கவும். **D P. 18 ¶ 1**

(6) To whom were the grandeur and military glory of Babylon chiefly due? For what characteristics was this city noted? Page 24, par. 1
(6) பாபிலோனின் பிரமாண்டத்திற்கும், ராணுவ சிறப்பிற்கும் பிரதான காரணர் யார்? எந்த சிறப்பம்சங்களுக்காக இந்த நகரம் பேர்பெற்றிருந்தது? **D P. 18 ¶ 2**

(7) What was the origin and significance of the name Babylon, and how was this changed by the native etymology? Page 24, par. 2, 3
(7) **பாபிலோன்** என்ற பெயரின் தோற்றமும் முக்கியத்துவமும் என்ன, மேலும் இது சொந்த நாட்டின் சொல்லிணக்கணத்தால் எவ்விதம் மாற்றப்பட்டது? **D P. 19 ¶ 1, 2**

(8) During whose reign and under what circumstances was Babylon overthrown? Page 24, par. 4; Page 25, par. 1
(8) யாருடைய ஆளுகையின்போது மற்றும் எவ்விதமான சந்தர்ப்பச் சூழ்நிலைகளுக்கு மத்தியில் பாபிலோன் கவிழ்க்கப்பட்டது? **D P. 19 ¶ 3 - P. 20 ¶ 2**

(9) In symbolic prophecy, what does a "city" signify? How is the Church also, and in the same connection, represented? Page 25, par. 2
(9) தீர்க்கத்தரிசன அடையாளத்தில் "நகரம்" என்பது எதைக் குறிக்கிறது? இதே விஷயத்தில் சபையும்கூட குறிக்கப்படுவது எப்படி? **D P. 20 ¶ 3**

(10) How does this same method of interpretation apply to Mystic Babylon? What is the distinction between the terms "harlot" and "Babylon"? What is the more restricted sense in which the term Babylon is applied? Page 25, par. 3
(10) இதே விதமான பொருள் விளக்கம் இரகசியமான பாபிலோனுக்குப் பொருந்துவது எப்படி? **"வேசி"** மற்றும் **"பாபிலோன்"** என்ற வார்த்தைகளுக்கிடையிலான வேற்றுமை என்ன? பாபிலோன் என்ற வார்த்தை சுருக்கமாக/குறிப்பிடும்படியாகப் பயன்படுத்தினால் அது யாரைக் குறிக்கும்? **D P. 21 ¶ 1, 2**

(11) Is the fact that Christendom does not accept the name, "Babylon," any proof that it is not applicable to her? Page 26, par. 1
11. கிறிஸ்தவ தேசங்கள், "பாபிலோன்" என்ற பெயரை ஏற்றுக்கொள்வதில்லை என்ற காரியத்தில், அது அவளுக்குப் பொருந்தாது என்பதற்கான ஆதாரம் ஏதேனும் உள்ளதா? **D P. 22 ¶ 1**

(12) What has been the general claim of Protestantism with respect to the name, "Babylon"? What change from this attitude has recently taken place? Why will neither Protestants nor Papists admit the foregoing, and what position is necessary for all who would get a true view of Babylon, as shown by the Revelator? Page 26, par. 2
12. "பாபிலோன்" என்ற பெயரைப் பொறுத்த வரையில் புராட்டடஸ்டன்ட் பிரிவினரின் பொதுவான கோரிக்கை என்னவாக இருந்திருக்கிறது? இந்த மனநிலையிலிருந்து அண்மையில் ஏற்பட்டிருக்கும் மாற்றம் என்ன? புராட்டடஸ்டன்டினரோ அல்லது போப்பு மார்க்கத்தினரோ மேற்கூறியவற்றை ஏன் ஒப்புக்கொள்ளமாட்டார்கள்? மேலும், வெளிப்படுத்தின விசேஷ ஆசிரியரால் காண்பிக்கப்பட்டுள்ளபடி, பாபிலோனைப் பற்றிய **உண்மையான பார்வையைப்** பெற்றுக்கொள்ள விரும்பும் யாவருக்கும் அவசியமான நிலை என்ன? **D P. 22 ¶ 2**

(13) What has been the attitude of the Kingdoms of the civilized world toward the great ecclesiastical systems? How are they fulfilling the antitype of the literal Babylon, and what will the judgment of Mystic Babylon mean to the nations of Christendom? Page 27, par. 1, 2
13. நாகரிக உலகின் இராஜ்யங்கள், மாபெரும் மத அமைப்புகள் விஷயத்தில் கொண்டிருந்த மனநிலை என்னவாக இருந்திருக்கிறது? சொல்லர்த்தமான பாபிலோனின் நிஜத்தை அவைகள் எவ்வாறு நிறைவேற்றுகின்றன? மேலும், இரகசியமான பாபிலோனின் நியாயத்தீர்ப்பானது கிறிஸ்தவ இராஜ்யமான தேசங்கள்மீது எப்படிப்பட்டதாகக் காணப்படும்? **D P. 23 ¶ 1, 2**

(14) What will be the effect upon the nations outside Christendom? and for what reason? Page 27, par. 3
14. கிறிஸ்தவ இராஜ்யங்கள் அல்லாத நாடுகள் மீதான தாக்கம் என்னவாக இருக்கும்? மேலும், இதற்கான காரணம் என்ன? **D P. 24 ¶ 1**

## பாபிலோன் - தாயும், குமாரத்திகளும்

(15) What is the true position of Protestantism, as it exists today? In what manner do both Romanists and Protestants "glory in their shame"? Can the true Church of Christ be recognized anywhere as a company from which all the tares have been separated? Page 28, par. 1
15. இன்றைய புராட்டடஸ்டன்ட் சபையினரின் உண்மை நிலை என்ன? ரோம சபையினரும், புராட்டடஸ்டன்ட் சபையினரும் எவ்விதத்தில் தங்களுடைய அவமானத்தில் மகிமைப்படுகின்றனர்? கிறிஸ்துவினுடைய **உண்மை சபையிலிருந்து களைகள்** யாவும் பிரிக்கப்பட்ட பின்னர், உண்மை சபை எவ்விதத்திலாவது ஒரு **கூட்டம்** என்று குறிப்பிடப்படக் கூடுமா? **D P. 24 ¶ 2**

(16) What is the significance of "harlotry," as symbolically used in Scripture? Since the "mother" is a religious system, rather than an individual, what should we expect to find in the illustration of the "daughters"? Page 29, par. 1, 2
16. வசனத்தில் "வேசித்தனம்" என்று அடையாளமாகப் பயன்படுத்தப்பட்டிருக்கும் வார்த்தையின் முக்கியத்துவம்/அர்த்தம் என்ன? **"தாய்"** என்பது ஒரு தனி நபரைக் குறிக்காமல், ஒரு மத அமைப்பைக் குறிக்கும் என்பதால், **"குமாரத்திகள்"** என்ற எடுத்துக்காட்டில் நாம் எதிர்பார்க்க வேண்டியது என்ன? **D P. 26 ¶ 1, 2**

(17) What circumstances gave birth to these daughter systems? At what time were these systems recognized as "virgins," and when did they become "harlots"? Page 29, par. 3
17. இந்தக் குமாரத்தி அமைப்புகள் பிறக்கக் காரணமாயிருந்த சூழ்நிலைகள் என்ன? எச்சமயத்தில் இந்த அமைப்புகள் "கன்னிகைகளாக" அடையாளம் கண்டுகொள்ளப்பட்டன, மற்றும் எப்பொழுது "வேசிகளாக" மாறிப்போயின? **D P. 26 ¶ 3**

(18) While the various reform movements did valuable work in "cleansing the sanctuary," which class alone was recognized by the Lord as the true Church? What has been the experience of this "wheat" class, while associated with Babylon? Page 30, par. 1
18. பல்வேறு சீர்திருத்த இயக்கங்கள் "பரிசுத்த ஸ்தலத்தை சுத்திகரிக்கும்" விலையேறப்பெற்ற பணிகளைச் செய்தபோதும், எந்த வகுப்பார் மாத்திரமே கர்த்தரால் உண்மை சபையாக அங்கீகரிக்கப்பட்டனர்? பாபிலோனுடன் தொடர்புள்ளவர்களாயிருக்கையில், இந்தக் "கோதுமை" வகுப்பார் பெற்றிருந்த அனுபவம் என்ன? **D P. 27 ¶ 1**

(19) What is the present experience of these "mourners in Zion"? And what has been the history of the various reform movements instituted by this class in the past? Page 31, par. 1, 2
19. "சீயோனில் துயரப்படுகிறவர்களின்" **இன்றைய** அனுபவம் என்ன? மேலும், இந்த வகுப்பினரால் கடந்த காலத்தில் நிறுவப்பட்ட பல்வேறு சீர்திருத்த இயக்கங்கள் பற்றின சரித்திரம் என்னவாக இருந்திருக்கிறது? **D P. 28 ¶ 1; D P. 29 ¶ 1**

(20) What disposition in the early Church led to its falling away, and what are the conditions at the present time? What are the proofs that the sects are worthy Daughters of the Mother organization? Page 31, par. 3; Page 32, par. 1
20. ஆதிகால சபையின் வீழ்ச்சிக்கு வழிநடத்தின மனப்பாங்கு என்ன, மற்றும் தற்காலத்தில் அதன் நிலைமைகள் என்ன? இந்தப் பிரிவினர் தாய் அமைப்பின் குமாரத்திகள் என்று சொல்லப்படுவதற்குப் பாத்திரவான்கள் என்பதற்கான நிரூபணங்கள்/சான்றுகள் என்ன? **D P. 29 ¶ 2, 3**

(21) How do some members of Protestant sects boast of their relationship to Rome? Page 32, par. 2, to Page 33, par. 1
21. புராட்டஸ்டன்ட் பிரிவுகளைச் சேர்ந்தவர்களில் சிலர் ரோம சபையுடனான தங்களது உறவுமுறை குறித்து எவ்வாறு பெருமை பாராட்டுகின்றனர்? **D P. 30 ¶ 1 - D P. 31 ¶ 1**

(22) What is the attitude of Protestants toward the doctrinal errors of Rome? Page 33, par. 2
22. ரோம சபையின் உபதேச ரீதியான தப்பறைகளைக் குறித்த விஷயத்தில் புராட்டஸ்டன்ட் சபையினரின் மனப்பாங்கு என்னவாக இருக்கிறது? **D P. 31 ¶ 2**

(23) What views regarding Apostolic Succession, clerical authority and the right of individual judgment are held by Protestants? Page 33, par. 3; Page 34, par. 1
23. அப்போஸ்தல வாரிசுரிமை, மதகுருவுக்குரிய அதிகாரம் மற்றும் தனிப்பட்ட தீர்ப்பளிக்கும் உரிமை ஆகியவைகள் குறித்து புராட்டஸ்டன்ட் சபையினர் கொண்டுள்ள கருத்து என்ன? **D P. 32 ¶ 1, 2**

(24) What language was used by Pope Leo in his encyclical addressed to "The Princes and Peoples of the Earth," and to the Roman Church in America, and in his "Apostolic Letter to the English People"? Page 34, par. 2, to Page 35, par. 1

24. "பூமியின் இராஜாக்களுக்கும், ஜனங்களுக்கும்," அமெரிக்காவில் உள்ள ரோம சபைக்கும்," "ஆங்கில மக்களுக்கான தனது அப்போஸ்தல கடிதத்திலும்" போப் லியோ தனது பிரசித்தமான கடிதத்தில் பயன்படுத்தின மொழிநடை என்ன? **D P. 33 ¶ 1-3**

(25) Describe the Papal "Missions for Protestants," and how Protestantism is being ensnared by this craftiness. Page 35, par. 2, 3

25. போப் மார்க்கம் மேற்கொண்ட "புராட்டஸ்டன்டினருக்கான ஊழியங்களையும்," அதன் தந்திரத்தினால் புராட்டஸ்டன்டிஸம் எவ்வாறு சிக்கவைக்கப்பட்டிருக்கிறது என்பதையும் விவரிக்கவும். **D P. 34 ¶ 1, 2**

(26) Does the fact that many devout and faithful souls have worshiped God within these systems prove that the name, "Babylon" is not properly applicable? Page 35, par. 4

26. பயபக்தியும், உண்மையுமுள்ள அநேக ஆத்துமாக்கள் இந்த அமைப்புகளுக்குள் இருந்தவாறு **தேவனைத்** தொழுதுகொண்டு வருகின்றனர் என்ற உண்மையினிமித்தம், "பாபிலோன்" என்ற பெயர் இதற்குச் சரியாகப் பொருந்துவதில்லை என்பதை நிரூபிக்கிறதா? **D P. 35 ¶ 1**

(27) What is the general accepted application of the term "Christendom"? Page 36, par. 1

27. "கிறிஸ்தவ தேசங்கள்" என்று பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட வார்த்தையின் பயன்பாடு என்ன? **D P. 35 ¶ 2**

(28) Upon what doctrine is the present civil system founded? What similar doctrine has controlled in religious affairs? What has been the Lord's attitude toward both civil and religious systems? Page 36, par. 2

28. தற்போதைய சமுதாய அமைப்பு எந்த உபதேசத்தின் அடிப்படையில் நிறுவப்பட்டது? மத சம்பந்தமான காரியங்களில் கட்டுப்பாட்டைக் கொண்டுவந்திருக்கக்கூடிய இதேவிதமான உபதேசம் என்ன? சமுதாய மற்றும் மத அமைப்புகள் குறித்த விஷயத்தில் கர்த்தருடைய மனப்பாங்கு என்னவாக இருந்திருக்கிறது? **D P. 35 ¶ 3**

## பாபிலோனின் அழிவு

(29) In what language is the destruction of Babylon, Christendom, described by John the Revelator. and the Prophet Daniel? However, what must be her experience immediately preceding her violent overthrow? Page 37, par. 1

29. பாபிலோன் மற்றும் கிறிஸ்தவ தேசங்களின் அழிவுகுறித்து, வெளிப்படுத்தின விசேஷத்தை எழுதின யோவானாலும், தானியேல் தீர்க்கத்தரிசியினாலும் எவ்வாறு விவரிக்கப்பட்டுள்ளது? இருப்பினும், அவள் (பாபிலோன்) முற்றிலுமாக அழிக்கப்படுவதற்கு முன்னர் எவ்வித அனுபவத்திற்குள் கடந்துபோக வேண்டியது அவளுக்கு அவசியமாயிருக்கிறது? D P. 36 ¶ 1

(30) What will be the greatness of Babylon's punishment? And who will share in her plagues? Page 37, par. 2

30. மிகப்பெரியதாய் இருக்கப்போகும் பாபிலோனின் தண்டனை என்ன? மேலும், அவளுக்கு உண்டாகும் **வாதைகளில்** பங்குகொள்ளப்போகிறவர்கள் யார்? **D P. 37 ¶ 1**

(31) What are Papacy's boastings and threats in regard to her regaining of temporal power? And how will this matter culminate in the great crisis? Page 38, par. 1 to 3

31. தற்காலிக அதிகாரத்தை மீண்டும் பெறுவது தொடர்பாக போப்பு மார்க்கத்தின் பெருமைபாராட்டலும், அச்சுறுத்தல்களும் (மிரட்டல்களும்) என்ன? மேலும், இந்த விஷயம் பெரும் நெருக்கடியில் எவ்வாறு உச்சக்கட்டத்தை அடையும்? **D P. 38 ¶ 1 - D P. 39 ¶ 2**

(32) Why will Babylon's plagues come "in one day" and what is the significance of this phrase? Page 39, par. 1
32. பாபிலோனின் வாதைகள் "ஒரே நாளில்" வருவது ஏன்? மேலும், இந்தச் சொற்றொடரின் அர்த்தம் என்ன? **D P. 39 ¶ 3, 4**

(33) Read and interpret Jer. 51:1-3, 24, 44, 58 and Rev. 19:1, 2. Page 39, par. 2, to Page 40, par. 1
33. எரே. 51:1-3, 24, 44, 58 மற்றும் வெளி. 19:1, 2 ஆகிய வசனங்களை வாசித்து விளக்கிக் கூறவும். **D P. 39 ¶ 5; D P. 40 ¶ 1**

(34) What is the Lord's command to His sanctified ones who recognize Babylon's true condition? Page 40, par. 2, to Page 41, par. 1
34. பாபிலோனின் உண்மை நிலையை உணர்ந்தவர்களாகிய கர்த்தரால் பரிசுத்தமாக்கப்பட்டவர்களுக்கு அவருடைய கட்டளை என்ன? **D P. 41 ¶ 1; D P. 42 ¶ 1**

(35) With a few individual exceptions, what is the attitude of Christendom, as expressed in Rev. 3:14-22? Page 41, par. 2
35. வெகுசில தனிப்பட்ட விதிவிலக்குகளைத் தவிர, வெளிப்படுத்தல் 3:14-22 வரையிலான வசனங்களில் வெளிப்படுத்தப்பட்டுள்ளபடி, கிறிஸ்தவ இராஜ்யங்களின் மனநிலை என்னவாக இருக்கிறது? **D P. 43 ¶ 1**

(36) Why is the reformation of Christendom impossible, as prophetically stated in Isaiah 47? Page 42, par. 1 to 3
36. ஏசாயா 47-ஆம் அதிகாரத்தில் தீர்க்கத்தரிசனமாகக் கூறப்பட்டபடி, கிறிஸ்தவ இராஜ்யத்தின் சீர்திருத்தம் என்பது சாத்தியமற்றதாக இருப்பது ஏன்? **D P. 43 ¶ 2; D P. 44 ¶ 1, 2**

(37) In view of the foregoing, what should be the course of the Lord's people still within Babylon's borders? And what is their only place of refuge? Page 43, par. 1, 2
37. மேற்கூறியவற்றைப் பார்க்கும்போது, இன்னமும் பாபிலோனின் எல்லைகளுக்குள் காணப்படும் கர்த்தருடைய ஜனங்களின் நடவடிக்கை என்னவாக இருக்கவேண்டும்? மேலும், அவர்களது ஒரே அடைக்கலம் எது? **D P. 45 ¶ 1 , 2**

(38) What is the real significance of the command, "Come out of her, My people"? Page 44, par. 1, 2
38. "என் ஜனங்களே, அவளை விட்டு வெளியே வாருங்கள்" என்ற கட்டளையின் உண்மையான முக்கியத்துவம் என்ன? **D P. 45 ¶ 3;  D P. 46 ¶ 1**

(39) What should be our attitude toward the various social and financial bondages of Christendom? Page 44, par. 3; Page 45, par. 1
39. கிறிஸ்தவ இராஜ்யத்தின் பல்வேறு சமுதாய மற்றும் பொருளாதார கட்டுகள் குறித்த விஷயத்தில் நம்முடைய மனநிலை என்னவாக இருக்கவேண்டும்? **D P. 46 ¶ 2; D P. 47 ¶ 1**

(40) What should be the general attitude of the Lord's people, as the Time of Trouble approaches? Page 45, par. 2
40. உபத்திரவ காலம் நெருங்குகையில், கர்த்தருடைய ஜனங்களின் பொதுவான மனநிலை என்னவாக இருக்கவேண்டும்? **D P. 48 ¶ 1**

---

# வேத ஆராய்ச்சி
# தொகை நூல் IV மீதான
# பெரோயரின் கேள்விகள்

## அத்தியாயம் 3

### *"நீதியைச் சரிக்கட்டும் நாளின் அவசியமும், நியாயமும்"*

(1) What were Jesus' words respecting the special responsibility of the generation living in the end of the Jewish Age? Page 47, par. 1
1. யூத யுகத்தின் முடிவில் வாழ்ந்த சந்ததியின் விசேஷித்த பொறுப்பைக் குறித்த இயேசுவின் வார்த்தைகள் என்ன? **D P. 51 ¶ 1**

(2) At what time, and under what circumstances, was this terrible prophecy fulfilled? Page 47, par. 2; Page 48, par. 1
2. இந்தப் பயங்கரமான தீர்க்கத்தரிசனம் எப்பொழுது மற்றும் எவ்வித சூழ்நிலைகளின் மத்தியில் நிறைவேறியது? **D P. 52 ¶ 1, 2**

(3) Of what greater calamity was this trouble upon fleshly Israel a foreshadowing? Page 48, par. 2; Page 49, par. 1
3. மாம்சீக இஸ்ரயேலர் மீது வந்த இந்த உபத்திரவம் முன்னறிவித்த மாபெரும் பேராபத்து எது? **D P. 53 ¶ 1, 2**

### மகா உபத்திரவம் முந்தைய காரணிகளின் ஒரு நியாயமான விளைவு

(4) Explain how the Great Time of Trouble upon Christendom is a legitimate effect from preceding causes. Page 49, par. 2, to Page 50, par. 1
4. கிறிஸ்தவ இராஜ்யங்களின் மீதான மகா உபத்திரவ காலம் முந்தைய காரணங்களிலிருந்து வரும் ஒரு நியாயமான விளைவு என்பதை விளக்குக. **D P. 54 ¶ 1, 2**

(5) What is God's Law with respect to sowing and reaping, as applied to nations, as well as individuals? Page 51, par. 1
5. தேசங்களுக்கும் தனிநபர்களுக்கும் உரியதாகக் கருதும், **விதைத்தல்** மற்றும் **அறுத்தலைக்** குறித்த தேவனுடைய பிரமாணம் என்ன? **D P. 56 ¶ 1**

### கிறிஸ்தவ இராஜ்யங்களின் கடமைகளும், அவைகளைக் குறித்த அவளுடைய எண்ணமும்

(6) What have been the opportunities and attitude of Babylon, as respects the principles of truth and righteousness? Page 51, par. 2
6. சத்தியம் மற்றும் நீதியின் கொள்கைகளைப் பொருத்தமட்டில் பாபிலோனின் வாய்ப்புகள் மற்றும் எண்ணம் எதுவாக இருந்தது? **D P. 56 ¶ 2**

(7) In what manner have the civil powers been warned? What is the last warning of God's inspired Prophet? Page 52, par. 1
7. சமுதாய சக்திகள் எவ்விதமாக எச்சரிக்கப்பட்டன? தேவனால் உணர்த்தப்பட்ட தீர்க்கத்தரிசியின் கடைசி **எச்சரிப்பு** என்ன? **D P. 58 ¶ 1**

(8) How is the importance of the Lord's counsel being forced upon the attention of even men of the world? Page 53 to Page 54, par. 3
8. கர்த்தருடைய ஆலோசனையின் முக்கியத்துவம் உலக மனிதர்களின் கவனத்துக்கு எவ்வாறு கொண்டுவரப்படுகிறது? **D P. 58 ¶ 2 - D P. 61 ¶ 1**

(9) Notwithstanding these warnings, what is the attitude of those in authority, as illustrated by the utterances of the German Emperor and the Czar of Russia? Page 55, par. 1, to Page 58, par. 1
9. இந்த எச்சரிப்புகள் இருந்தபோதிலும், ஜெர்மானிய சக்ரவர்த்தி மற்றும் ரஷ்ய பேரரசரின் வார்த்தைகளில் எடுத்துக்காட்டியபடி அதிகாரத்தில் இருந்தவர்களின் மனநிலை என்ன? **D P. 62 ¶ 1 - D P. 66 ¶ 1**

(10) What prophetic statement was made by Abraham Lincoln? Page 58, par. 2, 3
10. ஆபிரகாம் லிங்கன் கூறிய தீர்க்கதரிசன வார்த்தைகள் என்ன? **D P. 66 ¶ 2, 3**

(11) What public utterances regarding financial and social matters have been made by statesmen and political leaders of these United States? Page 58, par. 4, to Page 60, par. 1
11. பொருளாதார மற்றும் சமுதாய காரியங்களைக்குறித்து அமெரிக்க ஐக்கிய நாடுகளின் தேசத் தலைவர்களும், அரசியல் தலைவர்களும் உரைத்த பொது அறிக்கைகள் என்ன? **D P. 67 ¶ 1 - D P. 69 ¶ 1**

(12) What warnings have the ecclesiastical powers received? And with what results? Page 60, par. 2 to 5
12. மத ரீதியான சக்திகள் பெற்ற எச்சரிப்புகள் என்ன? மற்றும் அதன் விளைவுகள் என்ன? **D P. 69 ¶ 2 - D P. 70 ¶ 2**

(13) Are the "tares" in the Church confined to the pews? How does the Christian ministry differ from other professions? Page 61 to Page 62, par. 1
13. சபையில் உள்ள "களைகள்" போதக மேடைக்கு உரியவர்களா? மற்ற உத்தியோகத்தில் இருந்து கிறிஸ்தவ ஊழியம் எவ்விதத்தில் வேறுபடுகிறது? **D P. 71 ¶ 1, 2**

(14) What are the responsibilities and temptations of those who have undertaken the ministry of the Gospel? What course has been followed by the majority of the clergy, especially in the Church of Rome? Page 62, par. 2; Page 63, par. 1
14. சுவிசேஷத்தின் ஊழியத்தைத் தேர்ந்தெடுத்தவர்களுக்கான பொறுப்புகளும், சோதனைகளும் என்ன? குறிப்பாக ரோம திருச்சபையில் உள்ள பெரும்பான்மையான மதகுருமார்கள் பின்பற்றும் போக்கு என்ன? **D P. 72 ¶ 1, 2**

(15) What course was subsequently followed by the Protestant clergy? What has been their attitude toward earnest students of Truth and what is comprehended in the term, "Systematic Theology"? Page 63, par. 2, to Page 64, par. 2
15. அதைத் தொடர்ந்து புராட்டஸ்டண்ட் வகுப்பினர் பின்பற்றின போக்கு என்ன? சத்தியத்தை வாஞ்சையோடு கற்பவர்கள் விஷயத்தில் இவர்களுடைய எண்ணம் என்னவாக இருந்தது? மேலும் "முறையான இறை போதனை" (Systematic Theology) என்ற வார்த்தையில் உள்ளடக்கப்பட்டவைகள் என்ன? **D P. 74 ¶ 1 - D P. 75 ¶ 2**

(16) Why need the common people, or laity, not be surprised that the clergy, as a class, are blind to the Harvest Truth now due? Page 65, par. 1
16. குருமார் வகுப்பினர் **தற்போது வெளியாக்கப்பட்டுள்ள** அறுவடை சத்தியத்திற்கு குருடாக்கப்பட்டிருப்பதைக் குறித்து பொது ஜனங்களோ அல்லது **விசுவாசிகளோ** ஆச்சரியப்பட அவசியமில்லாதது ஏன்? **D P. 76 ¶ 1**

(17) Is it possible for individuals to shirk their personal responsibility in the matter of proving truth? Page 66, par. 1
17. **சத்தியத்தை ஆராய்ந்து ஏற்றுக்கொள்ளும்** விஷயத்தில் உள்ள தங்களுடைய தனிப்பட்ட பொறுப்பிலிருந்து தனிநபர்கள் விலகுவது சாத்தியமானதா? **D P. 77 ¶ 1**

(18) What course does wisdom, to say nothing of principle, dictate with respect to purely temporal affairs? Page 67, par. 1, 2

18. கோட்பாடுகளைக் குறித்து ஏதும் சொல்லாத ஞானம், முற்றிலும் **தற்காலிக** காரியங்களைப் பற்றி கட்டளையிடும் போக்கு என்ன? **D P. 78 ¶ 1; D P. 79 ¶ 1**

## அஞ்ஞான தேசங்களுக்கு கிறிஸ்தவ இராஜ்யங்கள் மற்றும் மகா உபத்திரவ காலத்துக்கும் இடையிலான தொடர்பு

(19) What has been the responsibility of the heathen nations, as expressed in Romans 1:18-32? Page 68, par. 1, to Page 70, par. 2

19. ரோமர் 1:18-32 வரையுள்ள வசனங்களில் வெளிப்படுத்தப்பட்டுள்ளபடி, அஞ்ஞான மார்க்க தேசங்களின் பொறுப்பு என்னவாக இருந்திருக்கிறது? **D P. 80 ¶ 1 - D P. 83 ¶ 1**

(20) What, therefore, is the position of the whole world before the Great Judge? Page 70, par. 3

20. இப்படியிருக்க, மகா நியாயாதிபதிக்கு முன்பாக முழு உலகத்தின் நிலை என்ன? **D P. 83 ¶ 2**

(21) Explain how the responsibility for the present condition of the heathen in large measure rests upon Christendom. Page 71, par. 1 to 3

21. அஞ்ஞான மார்க்கத்தின் தற்போதைய நிலைமைக்கான பொறுப்பு பெருமளவில் கிறிஸ்தவ இராஜ்யங்களின் மீது எவ்வாறு சுமந்திருக்கிறது என்பதை விளக்கவும். **D P. 83 ¶ 3 - D P. 84 ¶ 2**

(22) What criticism of Christianity, so-called, has been made by leading heathen representatives? Page 72, par. 1, 2

22. அஞ்ஞான மார்க்கத்தின் முதன்மை பிரதிநிதிகளால், கிறிஸ்தவம் என்று சொல்லிக்கொள்ளப்படுபவைகள் குறித்து எழுப்பப்பட்ட விமர்சனம் என்ன? **D P. 85 ¶ 1, 2**

(23) Aside from the moral aspect of the question, why must heathen nations necessarily suffer in the fall of "Babylon"? Page 72, par. 3; Page 73

23. நீதிநெறி சார்ந்தவைகள் தவிர்க்கப்பட்டிருந்தும், "பாபிலோனின்" வீழ்ச்சியில் அஞ்ஞான தேசங்கள் அவசியமாக பாதிக்கப்படவேண்டியது ஏன்? **D P. 86 ¶ 1 - D P. 87 ¶ 1**

---

# வேத ஆராய்ச்சி
# தொகை நூல் IV மீதான
# பெரேயரின் கேள்விகள்

## அத்தியாயம் 4

### *“மகா நியாயசபைக்கு முன்பாக பாபிலோன் குற்றஞ்சாட்டப்படுதல்”*

(1) In what manner are "the powers that be" now being tried in open court? Page 75
1. “உண்டாயிருக்கிற அதிகாரங்கள்” **தற்போது** எவ்விதத்தில் பொது நீதிமன்றத்தில் விசாரிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன? **D P. 89 - D P. 90 ¶ 3**

(2) What is the object of this trial? Is it to convince the Great Judge of the actual standing of Christendom? Page 76, par. 1
2. இந்த விசாரணையின் **நோக்கம்** என்ன? அது கிறிஸ்தவ இராஜ்யங்களின் உண்மையான நிலைப்பாட்டைக் குறித்து மகா நியாயாதிபதியை சமாதானப்படுத்துவதற்கான நோக்கமா? **D P. 90 ¶ 4**

(3) How do the civil and ecclesiastical powers stand their trial? Page 76, par. 2
3. சமூக (அரசியல்) மற்றும் மத அதிகாரங்கள் தங்களது விசாரணையை எவ்வாறு **எதிர்கொள்ளும்**? **D P. 91 ¶ 1**

### பாபிலோன் தராசில் நிறுத்தப்பட்டது

(4) While the masses are challenging both the civil and ecclesiastical powers to prove their claims to rule by Divine authority, to what fact are both rulers and ruled blinded? Page 77, par. 1
4. **தெய்வீக அதிகாரத்தினால்** ஆட்சி செய்வதற்கான தங்கள் கோரிக்கைகளை நிரூபிக்க அரசியல் (சமூக) மற்றும் மத அதிகாரங்களுக்கு திரளான மக்கள் அறைகூவல் விடுகையில், ஆட்சியாளர்களும், ஆளப்பட்டவர்களுமாகிய இரு தரப்பினரும் எந்த உண்மைக்கு குருடாக்கப்பட்டனர்? **D P. 91 ¶ 2**

(5) Why have ignorance and superstition been fostered and encouraged among the masses by the ruling classes? What change in these matters has recently come about, and through what agencies? Page 77, par. 2, 3
5. ஆளும் வர்க்கத்தினரால் அறியாமையும், மூடநம்பிக்கையும் பாமர மக்களிடையே வளர்க்கப்பட்டு, ஊக்குவிக்கப்பட்டிருப்பது ஏன்? சமீபத்தில் இவ்விஷயங்களில் ஏற்பட்டிருக்கும் மாற்றம் என்ன? மற்றும் எந்தக் காரணிகள் மூலம் மாற்றம் ஏற்பட்டது? **D P. 92 ¶ 1, 2**

(6) What has been the result of this increase of knowledge? And what steps have been taken in some countries toward putting an end to the education of the masses? Page 78, par. 1, 2
6. அறிவு பெருக்கத்தின் விளைவு என்னவாக இருந்திருக்கிறது? மேலும், பாமர மக்களின் கல்விபடிப்புக்கு முற்றுப்புள்ளிவைப்பது குறித்து சில நாடுகளில் எடுக்கப்பட்டிருந்த நடவடிக்கைகள் என்ன? **D P. 93 ¶ 1, 2**

(7) Why will such repressive policies on the part of governments fail of success? Page 79, par. 1, 2
7. அரசாங்கங்களின் தரப்பில் இத்தகைய அடக்குமுறை ஏன் வெற்றி பெறாது? **D P. 94 ¶ 1, 2**

(8) While Babylon is being weighed in the balances, what are the respective attitudes of the masses and the civil and ecclesiastical powers? Page 79, par. 3, to Page 80, par. 2
8. பாபிலோன் தராசிலே நிறுக்கப்பட்டிருக்கையில், பாமர மக்கள் மற்றும் அரசியல் மத அதிகாரங்களின் மனப்பான்மை என்னவாக இருக்கிறது? **D P. 95 ¶ 1 - D P. 96 ¶ 1**

(9) What are some of the fearless criticisms of Babylon on the part of the public press? Page 81, par. 1, to Page 86, par. 1
9. பொது பத்திரிக்கைகளின் பகுதிகளில் பாபிலோனைப் பற்றி காணப்பட்ட சல பயமற்ற விமர்சனங்கள் என்ன? **D P. 97 ¶ 1 - D P. 103 ¶ 3**

(10) What was the cost and evident object of the marvelous display of extravagance at the coronation of the Czar of Russia? Page 86, par. 2, to Page 88, par. 1
10. ரஷ்ய பேரரசரது முடிசூட்டு விழாவின் ஆயத்தங்களுக்கான செலவும், மிதமிஞ்சின ஊதாரித்தனத்தின் திகைப்பூட்டும் காட்சியின் நோக்கமும் என்ன? **D P. 104 ¶ 1 - D P. 107 ¶ 1**

(11) What contrasting facts manifest the lack of true Christian sentiments on the part of the rulers of so-called Christian nations? Page 89, par. 1
11. கிறிஸ்தவ இராஜ்யங்கள் என்று தங்களைக் கூறிக்கொள்ளும் ஆட்சியாளர்களின் தரப்பில் உண்மையான கிறிஸ்தவ மனோபாவமே இல்லாமல் இருப்பதை வெளிப்படுத்தும் மாறுபட்ட உண்மைகள் என்ன? **D P. 108 ¶ 1**

(12) What are some facts relative to the enormous indebtedness of European countries? Page 89, par. 2, to Page 93, par. 2
12. ஐரோப்பிய நாடுகள் மிகுதியாய் கடமைக்குட்பட்டிருக்கும் நிலை தொடர்புடைய சில உண்மைகள் என்ன? **D P. 108 ¶ 2 - D P. 114 ¶ 2**

(13) What is the estimated cost of maintaining the standing armies of Europe? What has been the estimated loss of life during 25 years of nineteenth century wars? Page 93, par. 3, to Page 94, par. 2
13. ஐரோப்பாவின் இராணுவ படைகளைப் பராமரிப்பதற்காக மதிப்பிடப்பட்ட செலவு என்ன? பத்தொன்பதாம் நூற்றாண்டின் 25 ஆண்டுகால போர்களில் மதிப்பிடப்பட்ட உயிரிழப்பு என்னவாக இருந்திருக்கிறது? **D P. 114 ¶ 3 - D P. 116 ¶ 1**

(14) What did it cost during three years to keep peace among the "Christian" nations of Europe? Page 95, par. 1
14. ஐரோப்பிய "கிறிஸ்தவ" இராஜ்யங்களுக்கு இடையே **சமாதானத்தைக் காப்பதற்கென்று எடுத்துக்கொண்ட மூன்று வருஷங்களில்** ஆன செலவு என்ன? **D P. 116 ¶ 2**

(15) How much have the principal wars of recent times cost? And what has been the estimated loss of life? Page 95, par. 2, 3
15. அண்மை காலங்களின் பிரதான போர்களுக்கென்று செலவிடப்பட்டிருக்கும் தொகை எவ்வளவு? மேலும், மதிப்பிடப்பட்ட உயிரிழப்பு என்னவாக இருந்திருக்கிறது? **D P. 117 ¶ 1, 2**

(16) What comment upon the military system of modern governments has been made by the late Hon. John Bright, M. P? Page 96, par. 1, 2
16. நவீன அரசாங்கங்களின் இராணுவ அமைப்பு குறித்து மறைந்த மாண்புமிகு ஜான் பிரைட், எம்.பி. என்பவரால் கொடுக்கப்பட்டிருந்த கருத்துரை என்ன? **D P. 118 ¶ 1, 2**

(17) How is the judgment of the civil powers progressing? Page 96, par. 3
17. அரசியல் (சமூக) சக்திகளின் நியாயத்தீர்ப்பு எவ்வாறு தொடர்கிறது? **D P. 118 ¶ 3**

## தற்கால சமூக அமைப்பின் மீது உலகத்தின் குற்றச்சாட்டு

(18) Is Christendom's social system likewise under inspection? What is the notable criterion by which both the heathen and the masses of Christendom are judging the present social system? Page 96, par. 4, to Page 97, par, 1
18. கிறிஸ்தவ இராஜ்யங்களின் **சமூக** அமைப்பும் இதுபோலவே ஆய்வுக்குட்பட்டு இருக்கிறதா? அஞ்ஞான மார்க்கமும், கிறிஸ்தவ இராஜ்யங்களின் பாமர மக்களும் இன்றைய சமூக அமைப்பை நியாயந்தீர்க்கக்கூடிய கவனிக்கத்தக்க அளவுகோல் என்ன? **D P. 118 ¶ 4 ; D P. 119 ¶ 1**

(19) What is the general consensus of opinion regarding the present social and industrial systems of Christendom? Page 97, par. 2, to Page 99, par. 3

19. கிறிஸ்தவ இராஜ்யங்களின் இன்றைய சமூக மற்றும் தொழில்துறை அமைப்புகள் தொடர்பாக பெரும்பான்மையின் கருத்து என்ன? **D P. 119 ¶ 2 – D P. 123 ¶ 1**

(20) What two great extremes of the social system are being brought more and more to the attention of the whole world? Page 100 to Page 102

20. முழு உலகத்தின் கவனத்திற்கு மேலும் மேலும் கொண்டுவரப்படுகின்ற சமூக அமைப்பின் இரண்டு மாபெரும் உச்சநிலைகள் என்ன? **D P. 123 ¶ 2 – D P. 126 ¶ 1**

## சபை அதிகாரங்களைப் பற்றிய உலகத்தின் தீர்ப்பு

(21) Mention the most prominent points of criticism in John Edgerton Raymond's article on the "Decline of Ecclesiasticism," published in the North American Review. Page 102 to Page 104, par. 2

21. தி **நார்த் அமெரிக்கன் ரிவ்யூ** என்ற பத்திரிக்கையில், "சபையின் சரிவு" என்ற கட்டுரையில் ஜான் எட்கர்டன் ரேமண்ட் என்பவர் வெளியிட்ட மிக முக்கியமான விமர்சனங்களைக் குறிப்பிடவும். **D P. 126 ¶ 2 - D P. 130 ¶ 1**

(22) What notable fact was commented upon by Bishop Huntingdon in his article on "Social Problems and the Church"? Page 104, par. 3, 4

22. "சமூக மற்றும் சபையின் பிரச்சனைகள்" என்ற தலைப்பில் பிஷப் ஹண்டிங்டன் என்பவர் தனது கட்டுரையில் தெரிவித்த கருத்தின் மீதான குறிப்பிடத்தக்க உண்மை என்ன? **D P. 130 ¶ 2, 3**

(23) What other significant expressions of popular judgment of Christendom have been given utterance through the press? Page 105, par. 1, to Page 106, par. 2

23. பத்திரிக்கையின் பிரசுரங்கள் மூலம் கூறப்பட்டிருக்கின்ற கிறிஸ்தவ இராஜ்யங்களின் பிரசித்திபெற்ற தீர்ப்பின் மற்ற மிக முக்கியமான வெளிப்பாடுகள் என்ன? **D P. 131 ¶ 1 - D P. 132 ¶ 4**

(24) While the conduct of Babylon's leaders and their followers has been severely criticized, what is the attitude of the world toward her doctrines? And how are Babylon's leaders making answer to the charges against them? Page 106, par. 3, to Page 110, par. 2

24. பாபிலோனின் தலைவர்கள் மற்றும் அவர்களைப் பின்பற்றுபவர்களின் **நடத்தையானது** கடுமையாக விமர்சிக்கப்பட்டிருக்கையில், அவளது **உபதேசங்கள்** குறித்த விஷயத்தில் உலகத்தின் மனநிலை என்னவாக இருக்கிறது? மேலும், பாபிலோனின் தலைவர்கள் தங்களுக்கு எதிரான குற்றச்சாட்டுகளுக்கு எவ்வாறு பதில் அளிக்கின்றனர்? **D P. 133 ¶ 1 - D P. 139 ¶ 1**

(25) What part is the Great Judge taking in this day when the world is applying the test to Babylon's claims? Page 110, par. 3

25. பாபிலோனின் கோரிக்கைகளுக்கு உலகம் சோதனையை ஆரம்பித்திருக்கும்போது, இந்நாளில் மகா நியாயாதிபதி தம் சார்பில் எடுக்கும் பங்கு என்ன? **D P. 139 ¶ 2**

(26) When will Babylon's complete destruction be accomplished? And how do many already behold and read the handwriting of her doom? Page 111, par. 1

26. பாபிலோனின் முற்றிலுமான அழிவு எப்பொழுது நிறைவேற்றப்படும்? மேலும், அவளது நியாயத்தீர்ப்பைக் குறித்து எழுதப்பட்டிருக்கும் கையெழுத்தை அநேகர் ஏற்கெனவே எப்படி உற்று நோக்கி வாசித்திருப்பார்கள்? **D P. 140 ¶ 1**

(27) What is the attitude of Babylon's adherents at present? What is the Word of the Lord pronounced against Babylon through the Psalmist? (See Psa. 50:1, 4, 7, 16-22) Page 111, par. 2; Page 112, par. 1

27. இன்றைய பாபிலோனின் ஆதரவாளர்களின் மனநிலை என்னவாக இருக்கிறது? பாபிலோனுக்கு எதிராக சங்கீதக்காரனால் கூறப்பட்ட கர்த்தருடைய வார்த்தை என்ன? (சங். 50:1, 4, 7, 16-22 பார்க்கவும்) **D P. 141 ¶ 1, 2**

# வேத ஆராய்ச்சி
# தொகை நூல் IV மீதான
# பெரோயரின் கேள்விகள்

## அத்தியாயம் 5

### *“மகா நீதிமன்றம் முன் பாபிலோன் அவளது குழப்பம் - தேசிய அளவிலானது”*

(1) What statements made by Disraeli, when Prime Minister of England, indicate that the civil powers realize that the present judgment is going against them? Page 113

(1) தற்போதைய நியாயத்தீர்ப்பு தங்களுக்கு எதிராக நடந்துகொண்டிருக்கிறது என்பதாக அரசியல் சக்திகள் உணர்வதை டிஸ்ராயேலி, இங்கிலாந்து பிரதமர் சுட்டிக்காட்டியபோது, அளித்த அறிக்கைகள் என்ன? **D P. 143 - D P. 144 ¶ 1**

(2) How are these matters viewed by the public press, as illustrated in the London Spectator? Page 114, par. 1, to Page 118

(2) **லண்டன் ஸ்பெக்டேட்டர்** என்ற பத்திரிக்கையில் விளக்கப்பட்டுள்ளபடி, இவ்விஷயங்கள் பொதுப்பத்திரிக்கைகளால் எவ்வாறு பார்க்கப்பட்டன? **D P. 144 ¶ 2 - D P. 150 ¶ 1**

(3) Read extracts from an address given by James Beck, Esq., a prominent legal light of the Philadelphia Bar. Page 118, par. 1, to Page 123, par. 1

(3) பிலெடெல்பியா பாரின் ஒரு முக்கிய சட்ட ஒளியாகத் திகழும் ஜாஸ் பெக், எஸ்க் என்பவர் கொடுத்த உரையிலிருந்து எடுக்கப்பட்ட பகுதியை வாசிக்கவும். **D P. 152 ¶ 1 - D P. 158 ¶ 1**

(4) How do some of the reigning sovereigns of Europe regard the present situation? Page 123, par. 2, to Page 126, par. 3

(4) ஐரோப்பாவின் ஆளும் அதிகாரிகள் சிலர் தற்போதைய நிலையை எவ்வாறு கருதுகின்றனர்? **D P. 159 ¶ 1 - D P. 164 ¶ 1**

(5) What have been the relations between Socialism and the governments during recent years? Page 127, par. 1, to Page 129, par. 3

(5) சமீபத்திய ஆண்டுகளில் சோஷலிசத்திற்கும், அரசாங்கங்களுக்கும் இடையிலான தொடர்புகள் என்னவாக இருந்திருக்கிறது? **D P. 164 ¶ 2 – D P. 167 ¶ 4**

(6) In view of the foregoing facts and tendencies, what protective measures are being taken by kings and rulers? Page 129, par. 4

(6) மேற்கூறிய உண்மைகள் மற்றும் மனப்போக்குகளைப் பார்க்கும்போது, இராஜாக்கள் மற்றும் ஆட்சியாளர்களால் எடுக்கப்பட்ட பாதுகாப்பு நடவடிக்கைகள் என்ன? **D P. 168 ¶ 1**

### கிறிஸ்தவ குருகுலம் இனியும் ஒரு அரண் இல்லை

(7) What appeals have been and are being made to the Nominal Church by the political rulers? And with what results? Page 130 to Page 133

(7) அரசியல் ஆட்சியாளர்களால் பெயர் சபைக்குச் செய்யப்பட்டிருந்த மற்றும் செய்யப்பட்டு வருகிற முறையீடுகள் என்ன? மற்றும் எவ்வித விளைவுகளுடன்? **D P. 168 ¶ 2 - D P. 172 ¶ 1**

### மிதமிஞ்சிய போர் ஆயத்தங்கள்

(8) How has the fear of impending Revolution affected the nations of "Christendom"? Page 133 to Page 134, par. 4

(8) வரவிருக்கும் தவிர்க்க இயலாத புரட்சியைக் குறித்த பயம் “கிறிஸ்தவ இராஜ்யங்களின்” தேசங்களை எவ்வாறு பாதிக்கிறது? **D P. 172 ¶ 2 - D P. 174 ¶ 1**

## நவீன போர் ஆயுதங்கள்

(9) Describe some of the most up-to-date implements of war. Page 134, par. 5, to Page 141, par. 1
(9) போரின் மிக நவீன கருவிகள் சிலவற்றை விவரிக்கவும்... **D P. 174 ¶ 2 - D P. 181 ¶ 1**

(10) Read a description of modern warfare, as related by a naval captain engaged in the late Chinese War. Page 141, par. 2, to Page 142, par. 1
(10) நடந்து முடிந்த சீனப் போரில் ஈடுபட்ட ஒரு கடற்படை தளபதியால் எடுத்துரைக்கப்பட்டபடி, நவீன போர் நடவடிக்கைக்கான விளக்கம் ஒன்றை வாசிக்கவும். **D P. 182 ¶ 1 - D P. 183 ¶ 2**

(11) Of what prophecy are the foregoing facts a marvelous fulfilment? Page 142, par. 2
(11) மேற்கூறப்பட்ட உண்மைகள் எந்தத் தீர்க்கதரிசனத்தின் அற்புதகரமான நிறைவேறுதலாக உள்ளது? **D P. 183 ¶ 3**

## அமெரிக்க தன்னிகரற்ற நிலையில் இருந்தும்கூட, பழைய உலகத்தைக் காட்டிலும் மிக மோசமான தீமைகளால் பயமுறுத்தப்படுகிறது

(12) In what respect has the position of the United States of America been unique among the nations of the earth? Page 143, par. 1, 2
(12) உலக நாடுகளுக்கிடையே அமெரிக்காவின் நிலைப்பாடு எந்த வகையில் தனித்துவமானதாயிருக்கிறது? **D P. 184 ¶ 1, 2**

(13) Why has the "Harvest Message" especially prospered in this country? And what does this fact indicate? Page 144, par. 1
(13) "அறுவடை செய்தி" குறிப்பாக இந்த நாட்டில் விருத்தியடைந்திருப்பது ஏன்? மேலும், இந்த உண்மை சுட்டிக்காண்பிப்பது என்ன? **D P. 185 ¶ 1**

(14) Can it be said that the United States, as a nation, had any special claims upon Divine providence, or why have we been so favored? Page 145, par. 1
(14) **ஒரு தேசமாக** அமெரிக்கா (அமெரிக்க ஐக்கிய நாடுகள்), தெய்வீக மேற்பார்வையின்/ வழிநடத்துதலின் கீழ் ஏதேனும் விசேஷித்த உரிமைக்கோரல்களைக் கொண்டிருந்தது என்று கூறமுடியுமா, அல்லது நாம் ஏன் இவ்வளவு தயவு பெற்றவர்களாக இருக்கிறோம்? **D P. 186 ¶ 1**

(15) What have been the prevailing conditions and spirit of the people of this country in the past? And by what three elements is their destruction being threatened? Page 145, par. 2, to Page 147, par. 1
(15) கடந்த நாட்களில் இந்நாட்டு மக்களின் வழக்கமான சூழலும், ஜனங்களின் உள்ளுணர்வும் என்னவாக இருந்திருக்கிறது? மேலும், அவர்களது அழிவானது எந்த மூன்று அடிப்படை கூறுகளால் அச்சுறுத்தப்படுகிறது? **D P. 186 ¶ 2 - D P. 189 ¶ 1**

(16) What remedy will be attempted by the masses, and with what results? Page 147, par. 2, to Page 148, par. 2
(16) பொது மக்களால் முயற்சிக்கப்படும் பரிகாரம் என்ன? மற்றும் என்ன விளைவுகளுடன் காணப்படும்? **D P. 189 ¶ 2 - D P. 190 ¶ 1, 2**

(17) Why will protection and security under any of the kingdoms of this world be sought in vain? Cite the Scriptures bearing upon this point. Page 148, par. 3, to Page 149, par. 3
(17) இவ்வுலகின் எந்த ஓர் இராஜ்யத்தின் பாதுகாப்பும், தற்காப்பும் **விருதாவாகத்** தேடப்படுவது ஏன்? இவ்விஷயத்தை உள்ளடக்கின (bearing) வேத வசனங்களை மேற்கோள்காட்டவும். **D P. 190 ¶ 3 - D P. 192 ¶ 1**

(18) How are present conditions viewed by thinking men of the world, in fulfilment of prophecy? Page 149, par. 4, to Page 150, par. 1
(18) தீர்க்கதரிசனத்தின் நிறைவேற்றத்தில், உலகின் சிந்தனையாளர்களால் தற்போதைய சூழ்நிலைகள் எவ்வாறு பார்க்கப்படுகின்றன? **D P. 192 ¶ 2, 3**

(19) Amid all this confusion, what is the faith and assurance of God's people? Page 150, par. 2
(19) இந்தக் குழப்பங்களுக்கிடையில், தேவனுடைய ஜனங்களின் விசுவாசமும், உறுதியான நம்பிக்கையாகவும் இருப்பது என்ன? **D P. 192 ¶ 4**

## சமாதானம் இல்லாதிருந்தும் சமாதானம் சமாதானம் என்ற கூக்குரல்

58. டிரஸ்ட்களின் விஷயத்திற்கும், பெருங்கூட்டமான ஜனங்களின் விஷயத்தில் டிரஸ்ட்களின் ஆபத்தான மனப்பாங்குக்கும் சரியாகப் பொருந்தக்கூடிய பிரபலமான பழமொழி என்ன? **D P. 502 ¶ 1**

(59) Briefly note some of the operations and profits of the Trusts as published by the Pittsburgh Post and other newspapers in 1896. Page 364, par. 5, to Page 368, top

59. 1896-ஆம் ஆண்டில் **பிட்ஸ்பர்க் போஸ்ட்** மற்றும் பிற செய்தித்தாள்கள் மூலம் வெளியிடப்பட்டதுபோன்று டிரஸ்ட்களின் செயல்பாடுகள் மற்றும் இலாபங்கள் சிலவற்றைச் சுருக்கமாகக் குறிப்பிடவும். **D P. 502 ¶ 2 - D P. 507 ¶ 1**

## இங்கிலாந்தில் இருக்கும் டிரஸ்ட்

(60) Have the Trusts confined themselves to America? Page 368, par. 1, 2

60. டிரஸ்ட்டுகள் தங்களை அமெரிக்கர்களுக்கு மட்டுமே என்று வரையறுத்திருக்கிறதா? **D P. 508 ¶ 1, 2**

(61) What is the outlook for the immediate future with respect to the Trusts, and why are they likened to the Antediluvian "giants"? Page 368, par. 3, to Page 370, par. 1

61. டிரஸ்ட்டுகளைக் குறித்த எதிர்கால கண்ணோட்டம் என்ன? மேலும், அது மிகப் பழமையான "ராட்சதர்களுடன்" ஒப்பிடப்படுவது ஏன்? **D P. 509 ¶ 1 - D P. 511 ¶ 1**

## மிருகத்தனமான அடிமைத்தனத்துக்கு எதிராக நாகரிகமான அடிமைத்தனம்

(62) What is the history of the abolition of slavery in Great Britain, France, and the United States? Why would slavery have died a natural death under the modern competitive system, backed by mechanical inventions and the growth of population? Page 370, par. 2, to Page 371, par. 1

62. கிரேட் பிரிட்டன், பிரான்ஸ் மற்றும் அமெரிக்காவில் அடிமைத்தனத்தை ஒழித்தது குறித்த வரலாறு என்னவாக இருக்கிறது? இயந்திர கண்டுபிடிப்புகள் மற்றும் ஜனத்தொகை அதிகரிப்பு ஆகியவைகளின் அழுத்தத்தினால், நவீன போட்டி செயல்பாட்டின் கீழ் இந்த அடிமைத்தனமானது எப்படி **ஓர் இயற்கையான அழிவை** சந்தித்திருக்கக்கூடும்? **D P. 511 ¶ 2 - D P. 512 ¶ 1**

(63) Since the present social system is based upon the principle of supply and demand, what is the inevitable outcome? Page 371, par. 2, to 372, par. 1

63. தற்கால சமுதாய அமைப்பானது விநியோகம் மற்றும் தேவை என்ற கோட்பாட்டை அடிப்படையாகக் கொண்டு அமைக்கப்பட்டிருக்கின்றபடியால், தவிர்க்க இயலாத விளைவாக இருப்பது என்ன? **D P. 513 ¶ 1, 2**

## மேலும் கீழும் இருக்கும் ஏந்திரக் கல்லின் இடையே மனுக்குலம்

(64) What fact is becoming more and more manifest to the masses of the people? What are the nether and upper millstones, and what is the driving power? And what are some of the results of this grinding process? Page 372, par. 2, to Page 374, par. 1

64. பெருந்திரளான மக்களுக்கு அதிகமதிகமாக வெளிப்பட்டுக்கொண்டு வருகிற உண்மை என்ன? மேலும் கீழும் இருக்கக்கூடிய ஏந்திரக் கற்கள் என்ன, மற்றும் இதன் உந்து சக்தி என்ன? மேலும், மக்களை நசுக்கிக் கொண்டிருக்கும் இந்தச் செயலின் சில விளைவுகள் என்ன? **D P. 513 ¶ 3 - D P. 516 ¶ 1**

(65) What is the "sweater" system of labor, and how does it operate? Page 374, par. 2, to Page 376, par. 2

65. "**வியர்வை சிந்த** உழைக்கும்" முறை என்பது என்ன, மற்றும் அது எப்படி இயங்குகிறது? **D P. 516 ¶ 2 - D P. 519 ¶ 2**

(66) What are the relative conditions of rich and poor at present, and is it reasonable to expect that this situation would continue indefinitely? Page 376, par. 3, 4

66. தற்போது பணக்காரர் மற்றும் ஏழைகள் தொடர்புடைய சூழ்நிலைகள் என்ன, மற்றும் இந்த நிலைமை காலவரையின்றி தொடரும் என்று எதர்பார்ப்பது நியாயமானதா? **D P. 519 ¶ 3 - D P. 520 ¶ 1**

(67) What is the proportion of unemployed in the large cities of this country, and what are some of the strange inconsistencies of the present labor situation? Page 377, par. 1, to Page 378, par. 3

67. இந்த நாட்டின் மகா நகரங்களில் வேலையற்றோரின் விகிதம் என்னவாக இருக்கிறது? மேலும், தற்போதைய தொழிலாளரின் நிலையில் காணப்படும் சில விசித்திரமான முரண்பாடுகள் என்ன? **D P. 520 ¶ 2 - D P. 522 ¶ 3**

(68) What warnings have been given the world through some of the thinking men of this country? Page 378, par. 4, to Page 380, par. 3

68. இந்நாட்டின் சிந்தனையாளர் சிலர் மூலமாக உலகிற்குக் கொடுக்கப்பட்டிருக்கும் எச்சரிக்கைகள் என்ன? **D P. 523 ¶ 1 - D P. 526 ¶ 1**

## மனித சக்தியால் சமாளிக்க இயலாத உலக சூழ்நிலைகள்

(69) Are these terrible conditions among the poor confined to Europe and America? Page 381, par. 1, to Page 382, par. 3

69. ஏழைகள் மத்தியில் நிலவும் இந்தப் பயங்கரமான சூழ்நிலைகள் ஐரோப்பாவிற்கும், அமெரிக்காவிற்கும் வரையறுக்கப்பட்டிருக்கிறதா? **D P. 526 ¶ 2 - D P. 528 ¶ 1**

(70) Why will not the more intelligent and highly favored of mankind take some steps to relieve the distress of their fellow men? And what is the only hope? Page 383, to Page 384

70. மனுக்குலத்தின் அதிக அறிவுபூர்வமானவர்களும், அதிக சாதக சூழலைப் பெற்றவர்களும் தங்களது சக மனிதர்களைத் துயரத்திலிருந்து விடுவிக்க சில நடவடிக்கைகள் எடுக்கமாட்டாதது ஏன்? மேலும், இதற்கான ஒரே நம்பிக்கை என்ன? **D P. 529 ¶ 1 - D P. 530 ¶ 2**

# வேத ஆராய்ச்சி
# தொகை நூல் IV மீதான
# பெரேயரின் கேள்விகள்

## அத்தியாயம் 8

### “அறுவடையாளர்களின் கூக்குரல்”

(1) In our study of the labor situation, have we not overlooked a large conservative element in society, namely, the farmers? Give four reasons why the farmer class has been called "the back-bone" of society. Page 385

1. தொழிலாளரின் நிலைமை குறித்த நம்முடைய ஆய்வில், சமுதாயத்தில் ஒரு பெரிய பழமைவாத வகுப்பினராக விளங்கும் விவசாயிகளை நாம் கவனித்திருக்கவில்லையா? விவசாயி என்ற வகுப்பார் “சமுதாயத்தின் முதுகெலும்பு” என்று அழைக்கப்பட்டிருப்பதற்கான நான்கு காரணங்களை அளிக்கவும். **D P. 533**

(2) What remarkable changes in farm conditions have been witnessed during recent years, both in this country and in Europe? Page 386, par. 1 to Page 387, par. 1

2. இந்நாட்டிலும், ஐரோப்பாவிலும் சமீப காலங்களில் விவசாய விஷயங்களில் அடைந்து வரும் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் என்ன? **D P. 534 ¶ 1 - D P. 535 ¶ 1**

(3) How have the changes along religious lines affected the farmers? Page 388, par. 1

3. மத சார்பான மாறுதல்கள் விவசாயிகளை எவ்வாறு பாதித்திருக்கின்றன? **D P. 536 ¶ 1**

(4) What mighty influence has been steadily undermining the prosperity of this conservative class in America and Europe? And how has it been accounted for by statesmen, philosophers and scientists? Page 388, par. 2, to Page 391, par. 1

4. அமெரிக்காவிலும், ஐரோப்பாவிலும் இந்தப் பழமைவாத வகுப்பினரின் செழுமையைக் குறைத்து மதிப்பிடச் செய்திருக்கும் மாபெரும் செல்வாக்கு என்ன? மேலும் அரசியல்வாதிகள், தத்துவ ஞானிகள் மற்றும் விஞ்ஞானிகளால் இது எவ்வாறு கணக்கிடப்பட்டிருக்கிறது? **D P. 537 ¶ 1 - D P. 540 ¶ 1**

(5) As a result of depression in prices of farm products, what is the condition of the farmers, both in Europe and in America? Page 391, par. 2

5. விவசாய உற்பத்திப் பொருட்களின் விலையில் ஏற்பட்ட வீழ்ச்சியின் விளைவாக, ஐரோப்பாவிலும், அமெரிக்காவிலும் விவசாயிகளின் நிலை என்னவாக இருக்கிறது? **D P. 540 ¶ 2**

(6) Is there any Scriptural explanation for this situation? Page 392, par. 1 to 3

6. இந்த நிலைமைக்கு வசன ரீதியான விளக்கம் ஏதேனும் உள்ளதா? **D P. 541 ¶ 1-3**

(7) Does this prophecy apply to farm laborers, or to farmers in general, the world's "reapers"? What world-wide legislation has affected farmers everywhere? Page 392, par. 4

7. இந்தத் தீர்க்கதரிசனம் விவசாய கூலியாட்களுக்குப் பொருந்துமா அல்லது இவ்வுலகின் “அறுவடையாளர்களான” பொதுவான விவசாயிகளுக்குப் பொருந்துமா? எல்லா இடங்களிலும் விவசாயிகளை பாதித்திருக்கக்கூடிய உலகளாவிய சட்டம் என்ன? **D P. 542 ¶ 1**

(8) If silver were restored to its former monetary power, would it be a panacea for all present troubles? Page 393, par. 1

8. வெள்ளியானது அதன் முந்தைய பண மதிப்பீட்டுக்குத் திரும்பவும் கொண்டுவரப்பட்டால், அது தற்கால பிரச்சனைகள் அனைத்திற்குமான ஒரு சர்வலோக நிவாரணியாக இருக்கமா? **D P. 543 ¶ 1**

(9) Explain how the demonetization of silver has disadvantaged the farmer. Page 393, par. 2, to Page 394, last par.
9. வெள்ளியின் மதிப்பு குறைக்கப்பட்டது, **விவசாயிக்கு** எவ்வாறு **பாதகத்தை** ஏற்படுத்தியிருக்கிறது என்பதை விளக்கவும். **D P. 543 ¶ 2 - D P. 544 ¶ 2**

(10) What classes have been greatly advantaged by the demonetization of silver? Page 395, par. 1
10. வெள்ளியின் மதிப்பு குறைக்கப்பட்டதினால் எந்தெந்தப் பிரிவினர் பெரிதும் **நன்மையடைந்**திருக்கின்றனர்? **D P. 545 ¶ 1**

(11) When the farmers had discovered the cause of their trouble, why did not the people of the United States restore silver to its former value as money? Page 395, par. 2, 3
11. விவசாயிகள் தங்கள் கஷ்டத்திற்கான காரணத்தைக் கண்டறிந்திருந்தபோது, அமெரிக்க நாட்டு மக்கள் வெள்ளியைப் பணமாக அதன் முந்தைய மதிப்பிற்குக் கொண்டுவராதது ஏன்? **D P. 545 ¶ 2, 3**

(12) How did the demonetization of silver come about? When did Great Britain demonetize silver, and for what purpose? Why did she not fully succeed in attaining her objects? What was the premium of silver above gold in 1872? Page 396, par. 1, to Page 397, par. 1
12. வெள்ளியின் தரம்/மதிப்பு, குறைவாய் நிர்ணயிக்கப்படுவது எவ்வாறு ஏற்பட்டது? கிரேட் பிரிட்டன் வெள்ளியின் மதிப்பை எப்போது குறைத்தது, மற்றும் எந்த நோக்கத்திற்காக? அவள் தனது நோக்கங்களை அடைவதில் முழுமையாக வெற்றிபெறாதது ஏன்? 1872-ஆம் வருஷத்தில் தங்கத்திற்கும் மேலாக வெள்ளியின் மதிப்பு என்னவாக இருந்தது? **D P. 546 ¶ 1 - D P. 547 ¶ 1**

(13) When British financiers realized that by themselves they could not control gold or manufactures, what was their next step, and with what objects in view? Page 398, par. 1 to Page 399, par. 1
13. தங்கத்தையோ அல்லது உற்பத்தியாளர்களையோ தங்களால் கட்டுப்படுத்த இயலவில்லை என்பதை பிரிட்டன் முதலீட்டாளர்கள் தங்களுக்குள்ளாகவே உணர்ந்தபோது, அவர்களது அடுத்தக்கட்ட முயற்சி என்னவாக இருந்தது? மற்றும் எந்த நோக்கங்களைக் கொண்டு முயற்சிக்கப்பட்டது? **D P. 548 ¶ 1 - D P. 549 ¶ 2**

(14) What is the relation between "supply and demand," so far as wheat is concerned? What are the facts with respect to the constantly decreasing price of wheat compared with other products, excepting cotton and silver? Page 399, par. 2, to Page 400, par. 1
14. கோதுமையைப் பொறுத்தமட்டில் "தேவை மற்றும் விநியோகத்திற்கு" இடையே உள்ள தொடர்பு என்ன? பருத்தி மற்றும் வெள்ளியைத் தவிர மற்ற பொருட்களுடன் ஒப்பிடும்போது கோதுமையின் விலை தொடர்ந்து குறைந்து வருவது குறித்த உண்மைகள் என்ன? **D P. 549 ¶ 3 - DP. 551 ¶ 1**

(15) Is it not possible that the demonetization of silver may have been forced upon Christendom by the law of "supply and demand"? What is the estimated total amount of gold in the world, and how is this sum related to the world's business demands? Page 400, par. 2, 3
15. கிறிஸ்தவ இராஜ்யங்களின் மீது "உற்பத்தி விநியோக" சட்டமானது வெள்ளியின் தரம்/மதிப்பு-குறைவை **திணித்திருக்கக்**கூடாதா? உலகில் தங்கத்தின் மொத்த விலையாக நிர்ணயிக்கப்பட்டது என்ன? மேலும், இந்தத் தொகை உலக வியாபாரத் தேவைகளுடன் எவ்வாறு தொடர்புடையதாக உள்ளது? **D P. 551 ¶ 2, 3**

(16) Is it conceivable that the representatives of all the nations of Christendom deliberately entered into a conspiracy against the heathen nations and against their own farmers? What statements have been made by prominent statesmen as to the facts re the demonetization of silver? Page 401, par. 1, to Page 407, par. 3
16. கிறிஸ்தவ இராஜ்யங்களின் பிரதிநிதிகள் யாவருமே வேண்டுமென்றே புறஜாதியினருக்கும், தங்களது சொந்த விவசாயிகளுக்கும் எதிரானதொரு சதி ஆலோசனையில் இறங்கியுள்ளார்கள் என்பது அவ்வளவு எளிதாக ஒப்புக்கொள்ளக் கூடியதா? வெள்ளியின் மதிப்பு

செல்லாததாக்கப்படுவது தொடர்பான உண்மைகள் குறித்து முக்கிய அரசியல்வாதிகளால் வெளியிடப்பட்டிருக்கும் அறிக்கைகள் என்ன? **D P. 552 ¶ 1 - D P. 561 ¶ 2**

(17) What evidence is there that the farmers' cry, that reward for toil is kept back by fraud, is general to all gold-standard countries? Page 408, par. 1, to Page 409, first half
17. விவசாயிகளின் கூக்குரலானது, **மோசடியின்** பின்னணியில், பொதுவாகவே எல்லா தங்க-நிர்ணய நாடுகளிலும் இருக்கிறது என்பதற்கு உள்ள ஆதாரம் என்ன? **D P. 562 ¶ 1 - D P. 563 ¶ 3**

(18) Give two reasons why the present extreme depression of silver and of all commodities sold on a silver basis came about very gradually. Page 409, last par.
18. வெள்ளிக்கும், வெள்ளி மதிப்பை ஆதாரமாகக் கொண்டிருக்கும் அனைத்து நுகர் பொருள்களுக்கும் தற்போது ஏற்பட்டிருக்கும் மிதமிஞ்சிய வீழ்ச்சிக்கான இரண்டு காரணங்களை அளிக்கவும். **D P. 563 ¶ 4**

(19) In resume, then, what are the indisputable facts with respect to the "reapers," and the social and financial outlook? Page 410
19. "விவசாயிகள்" ("அறுவடையாளர்கள்") பொறுத்த வரையிலும், சமூக மற்றும் நிதிக் கண்ணோட்டத்தைப் பொறுத்த வரையிலும் உள்ள மறுக்க முடியாத உண்மைகள் என்ன? **D P. 564 ¶ 1 - D P. 565 ¶ 4**

(20) Show the remarkable corroboration of the foregoing facts with the prophecy of James 5:1-9. Page 411
20. யாக்கோபு 5:1-9-ஆம் வசனங்களின் தீர்க்கத்தரிசனத்துடன் மேற்கூறப்பட்ட உண்மைகளின் குறிப்பிடத்தக்க உறுதிப்படுத்தலைக் காண்பிக்கவும். **D P. 565 ¶ 5 - D P. 566 ¶ 3**

---

# வேத ஆராய்ச்சி
# தொகை நூல் IV மீதான
# பெரோயரின் கேள்விகள்

## அத்தியாயம் 9

### "கட்டுப்படுத்த முடியாத போராட்டம் உலக ஞானிகளின் சாட்சியங்கள்"

(1) What is the consensus of opinion among the wise men of the world with respect to the great social crisis? What are some of their arguments regarding the cause and ultimate outcome of present critical conditions? Page 413

1. மிகப்பெரிய சமூக நெருக்கடி பொறுத்த வரையில் உலக ஞானிகளிடையே காணப்படும் ஒருமித்த கருத்து என்ன? தற்போதைய சிக்கலான நிலைமைகளுக்கான காரணம் குறித்தும், அதன் இறுதி முடிவு குறித்தும் அவர்களிடத்தில் காணப்படும் சில வாதங்கள் என்ன? **D P. 569**

(2) But what new element in the conflict, never before encountered, have they failed to note? Page 414, par. 1

2. ஆனால் போராட்டத்தில், இதுவரை எதிர்படாத, அவர்கள் கண்டுகொள்ளத் தவறிவிட்டிருந்த புது காரணி என்ன? **D P. 570 ¶ 1**

(3) What is Senator Ingalls' moderate statement of the case and its remedy? Page 414, par. 2, to Page 421

3. செனட்டர் இன்கல்ஸ் அவர்கள் இந்தப் பிரச்சனையின் சாராம்சமாகவும், அதன் தீர்வாகவும் கொடுத்தது என்ன? **D P. 571 ¶ 1 - D P. 581**

(4) What is Dr. Lyman Abbott's opinion regarding present conditions, from the standpoint of a political economist? Page 421, par. 1, to Page 422, par. 1

4. அரசியல் பொருளாதார நிபுணரின் நிலைபாட்டிலிருந்து, தற்போதைய நிலைமைகள் குறித்து டாக்டர் லைமன் அபோட்டின் கருத்து என்ன? **D P. 582 ¶ 1 - D P. 584 ¶ 1**

(5) What is the nature of the peculiar and ineffectual remedy hinted at by Dr. Abbott? What is the true situation regarding "labor as a commodity"? And what is the only form of government that will be able to remedy existing evils? Page 423, par. 1, to Page 424, par. 1

5. டாக்டர் அபோட் சுட்டிக்காட்டிய விசித்திரமானதும், பயனற்றதுமான தீர்வின் தன்மை என்ன? "தொழிலாளி ஒரு வியாபாரப் பொருள்" என்பது பற்றின உண்மையான நிலைமை என்ன? மேலும், தற்போதுள்ள தீமைகளுக்குத் தீர்வு காணக்கூடிய ஒரே அரசாங்க முறைமை என்ன? **D P. 586 ¶ 1 - D P. 587 ¶ 1**

(6) What position is taken by Bishop Newman of the Methodist Episcopal Church regarding the relations between capital and labor? Page 425, par. 1, to Page 427, par. 1

6. முதலீட்டிற்கும், உழைப்பிற்கும் இடையிலான தொடர்பு குறித்து மெத்தடிஸ்ட் எபிஸ்கோபல் சபையின் பிஷப் நியூமேன் எடுத்திருக்கும் நிலைப்பாடு என்ன? **D P. 588 ¶ 1 - D P. 591 ¶ 1**

(7) Why is his position untenable, and why is his suggested remedy impossible? Page 427, par. 2, to Page 428, par. 3

7. அவரது நிலைப்பாடு ஏற்றுக்கொள்ள முடியாததாக இருப்பது ஏன்? மேலும், அவர் பரிந்துரைத்த தீர்வு சாத்தியமற்றதாக இருப்பது ஏன்? **D P. 591 ¶ 2 - D P. 593 ¶ 2**

(8) What views have been expressed by a prominent jurist of the United States in an address to graduates of a law class in one of our foremost colleges? Page 429. par. 1, to Page 432, par. 1

8. எங்களது முன்னனி கல்லூரிகள் ஒன்றில் சட்டப்படிப்பு பட்டதாரிகளுக்கு உரையாற்றிய அமெரிக்காவின் முக்கிய நீதிபதி ஒருவரால் வெளியிடப்பட்டிருந்த கருத்துக்கள் என்ன? **D P. 594 ¶ 1 - D P. 598 ¶ 2**

(9) Why does this able jurist offer no remedy? What was the nature of his counsel, and why? Page 432, par. 2, 3
9. இந்தத் திறமையான நீதிபதி **தீர்வு அளிக்காதது** ஏன்? அவருடைய **ஆலோசனையின்** தன்மை என்னவாக இருந்தது? மற்றும் ஏன்? **D P. 598 ¶ 3 - D P. 599 ¶ 1**

(10) How has Col. Ingersoll expressed himself respecting existing conditions? Page 433, par. 1, to Page 435, par. 2
10. நிலவிவரும் நிலைமைகளைக் குறித்து கர்னல் இங்கர்சால் அவர்கள் தன் கருத்தை எவ்வாறு தெரிவித்திருக்கிறார்? **D P. 600 ¶ 1 - D P. 603 ¶ 2**

(11) What is the nature of his argument, and what remedy does he suggest? Would his suggestion, if put into practice, bring the desired results? Page 436, par. 1, to Page 437, par. 1
11. அவரது வாதத்தின் தன்மை என்னவாக இருக்கிறது, மற்றும் அவர் பரிந்துரைத்த தீர்வு என்ன? அவரது பரிந்துரையானது, நடைமுறைக்கு வந்தால், விரும்பிய முடிவுகளைக் கொண்டுவருமா? **D P. 604 ¶ 1 - D P. 606 ¶ 1**

(12) How does Hon. J. L. Thomas, U. S. Asst. Attorney General, refute the claim so frequently made, that labor has been discriminated against by litigation favoring the rich? And what is his conclusion with respect to the future? Page 437, par. 2, to Page 440, last par.
12. செல்வந்தருக்குச் சாதகமாக சட்டம் இருப்பதால் தொழிலாளர் பாரபட்சமாய் நடத்தப்படுகிறார்கள் என்று அடிக்கடி எழுப்பப்படும் குரலை அமெரிக்க ஐக்கிய நாட்டின் துணை பொது வழக்கறிஞரான உயர்திரு. ஜெ. எல். தாமஸ் அவர்கள் எவ்வாறு மறுத்து வாதிடுகிறார்/ தவறு என்று நிரூபிக்கிறார்? மேலும், எதிர்காலத்தைப் பொறுத்தவரை அவருடைய முடிவுரை என்ன? **D P. 606 ¶ 2 - D P. 611**

(13) By what expressions did Wendell Phillips manifest his inability to solve the problem? Page 441, par. 1 to 3
13. எப்படிப்பட்ட வெளிப்பாட்டினால் வென்டல் பிலிப்ஸ், பிரச்சனைக்குத் தீர்வு காண தனது இயலாமையை வெளிப்படுத்தினார்? **D P. 612 ¶ 1, 2**

(14) What prediction was made by the great English historian Macaulay, with respect to the United States, and why would it now be applicable to all Christendom? Page 441, par. 4, to Page 442, par. 3
14. அமெரிக்க ஐக்கிய நாடுகளைக் குறித்து மாபெரும் ஆங்கில சரித்திர ஆசிரியரான மேக்குலே என்பவர் முன்னறிவித்தது என்ன? மேலும், அது இப்பொழுது கிறிஸ்தவ இராஜ்யங்கள் அனைத்திற்கும் ஏன் பொருந்தக்கூடிய ஒன்றாக இருக்கக்கூடும்? **D P. 612 ¶ 3 - D P. 614 ¶ 1**

(15) What hopes have been expressed by Hon. Chauncey M. Depew? Page 443, par. 1, to Page 448, par. 2
15. உயர் திரு. ச்சாவுன்சி எம். டிப்யூ அவர்களால் வெளிப்படுத்தப்பட்டிருந்த நம்பிக்கைகள் என்ன? **D P. 614 ¶ 2 - D P. 622 ¶ 3**

(16) How is Mr. Depew's suggestion of education as a remedy contradicted by the list of millionaires who never received a college education? Page 448, par. 3, to Page 449, par. 2
16. ஒரு பரிகாரமாக **கல்வி** குறித்து திரு. டிப்யூ அவர்கள் கொடுத்த ஆலோசனையானது, கல்லூரி வரை பயிலாத கோடீஸ்வரர் பட்டியலினால் எவ்வாறு முரண்படுகிறது? **D P. 623 ¶ 1 - D P. 624 ¶ 2**

(17) Why is education not the remedy for existing conditions? Page 449, last par.
17. இப்போதைய நிலைமைக்கு கல்வி என்பது நிவாரணமாக **இராதிருப்பது** ஏன்? **D P. 624 ¶ 3**

(18) What is Bishop Worthington's view regarding the cause of the present social commotion? Page 450, par. 1, to Page 451, par. 2
18. தற்போதைய சமூக குழப்பத்தின் காரணம் குறித்து பிஷப் ஒர்த்திங்டனின் கருத்து என்ன? **D P. 625 ¶ 1 - D 626¶ 2**

(19) How has Hon. W. J. Bryan replied to the Bishop's suggestion? Page 451, par. 3, to Page 452, par. 3
19. பிஷப்பின் ஆலோசனைக்கு மதிப்பிற்குரிய டபிள்யூ. ஜெ. ப்ரேயன் அவர்கள் எவ்வாறு பதிலளித்திருக்கிறார்? **D P. 626 ¶ 3 - D P. 627 ¶ 4**

(20) On what two points are the greatest thinkers agreed, as set forth in an English journal, "The Rock"? Page 452, par. 4, to Page 453, par. 1
20. **"தி ராக்"** என்ற ஆங்கில பத்திரிக்கையில் தெரிவித்திருக்கிறபடி, மாபெரும் சிந்தனையாளர்கள் எவ்விரண்டு விஷயங்களை ஒப்புக்கொள்கின்றனர்? **D P. 628 ¶ 1 - D P. 629 ¶ 1**

(21) What is Edward Bellamy's statement of the situation? Page 453, par. 2, to Page 457, par. 1
21. சூழ்நிலையைக் குறித்து திரு. எட்வர்ட் பெல்லாமியின் கூற்று என்ன? **D P. 629 ¶ 2 - D P. 634 ¶ 2**

(22) What is Dr. Edward McGlynn's view of Labor Reform and Single Tax theories? Page 457, par. 2, to Page 460, par. l
22. தொழில் மறுமலர்ச்சி மற்றும் ஒற்றை வரிக் கோட்பாடுகள் குறித்து டாக்டர் எட்வர்ட் மெக்லைனின் கருத்து என்ன? **D P. 634 ¶ 3 - D P. 638 ¶ 3**

(23) Wherein lies the weakness of his argument? Page 460, par. 2
23. அவரது வாதத்தின் குறைபாடு எதில் காணப்படுகிறது ? **D P. 639 ¶ 1**

(24) Explain Prof. W. Graham's outlook, as expressed from the standpoint of "Collectivism." Page 461, par. 1, to Page 462, last par.
24. "பொதுவுடைமைக் கொள்கையின்" நிலைப்பாட்டிலிருந்து வெளிப்படுத்தப்பட்டுள்ளபடி, பேராசிரியர் டபிள்யூ. கிரஹாமின் கண்ணோட்டத்தை விளக்கவும். **D P. 640 ¶ 1 - D P. 642 ¶ 2**

(25) What has already been accomplished by Collectivism throughout the civilized world? Page 463, par. 1, 2
25. நாகரிக உலகெங்கிலும் **பொதுவுடைமைக் கொள்கையால்** ஏற்கெனவே நிறைவேற்றப்பட்டிருப்பது என்ன? **D P. 642 ¶ 3 - D 643 ¶ 1**

(26) How is the situation viewed by Justice Henry B. Brown, and what, in his opinion, are the three most prominent perils which threaten the United States in the immediate future? Page 463, par. 3, to Page 466, par. 2
26. நீதிபதி ஹென்றி பி. பிரௌன் அவர்களால் இந்தச் சூழ்நிலை எவ்வாறு பார்க்கப்படுகிறது? மேலும், அமெரிக்க ஐக்கிய நாடுகளை எதிர்காலத்தில்/சமீபத்தில் அச்சுறுத்தப்போகும் மூன்று முக்கிய அபாயங்களாக, அவருடைய அபிப்ராயத்தில் உள்ளது என்ன? **D P. 643 ¶ 2 - D P. 646 ¶ 3**

(27) What is the "chief problem of civilization," as set forth by M. Clemenceau in his book, "Le Melee Sociale"? Page 466, par. 3, to Page 468, last par.
27. எம். கிளமென்சு என்பவர் **"லி. மலி சோஷலி"** என்ற தனது புத்தகத்தில் தெரிவித்துள்ளபடி, "நாகரிகத்தின் முக்கிய பிரச்சனை" என்ன? **D P. 647 ¶ 1 - D P. 650 ¶ 1**

---

# வேத ஆராய்ச்சி
# தொகை நூல் IV மீதான
# பெரேயாின் கேள்விகள்

## அத்தியாயம் 10

### "உத்தேசிக்கப்பட்ட பரிகாரங்கள் - சமூகம் மற்றும் பொருளாதாரம்"

(1) What should be our attitude toward the various proposed remedies for the relief of the groaning creation, ineffectual though they be? Page 469

1. ஏகமாய்த் தவித்துப் பிரசவ வேதனைப் பட்டுக்கொண்டிருக்கும் சிருஷ்டியின் உதவிக்காக உத்தேசிக்கப்பட்ட பல்வேறு நிவாரணங்கள் விஷயத்தில் அவை பலனற்றவை என்றாலும் நம்முடைய மனநிலை என்னவாக இருக்க வேண்டும்? **D P. 651**

(2) Why are these two proposed remedies usually compounded? And why will they never become effective as "cure-alls"? Page 470, par. 1, to Page 471, par. 1

2. உத்தேசிக்கப்பட்ட இவ்விரண்டு பரிகாரங்களும் சாதாரணமாய் ஒன்றோடொன்று கலந்திருப்பது ஏன்? மேலும், அவை "சர்வ நிவாரணி" போன்று ஒருபோதும் ஆற்றல்மிக்கதாய் இருக்கப்போவதில்லை என்பதும் ஏன்? **D P. 652 ¶ 1 - D P. 654 ¶ 1**

### தாராளமான வெள்ளி மற்றும் பாதுகாப்பான விலை போன்ற பரிகாரம்

(3) Wherein is it evident that Free Silver and Protective Tariff would simply put off the evil day a little longer, not prevent it? Page 471, par. 2, to Page 473, par. 2

3. **தாராளமான வெள்ளியும், பாதுகாப்பான விலைவாசியும்** தீங்கு நாளைச் சிறிது காலத்திற்குத் தள்ளிப்போடலாமே தவிர, அதைத் தடுக்க முடியாது என்பதற்கான சாட்சியம் எதிலுள்ளது? **D P. 654 ¶ 2 - D P. 657 ¶ 2**

### கம்யூனிசம் என்ற ஒரு பரிகாரம்

(4) What does Communism propose? How has it been defined by Rev. Joseph Cook? Why is it thoroughly impracticable in the present condition of men's hearts? What reply should be made to those who claim that Communism is taught in the Bible? What has been the history of communistic colonies that have been established in various localities? Was Communism tried by the early Christian Church, and with what results? Why were the Apostle's teachings and our Lord's example and teachings plainly contrary to communistic practices? In brief, why is communism opposed to the purpose and methods of the Gospel Age? Page 473, par. 3, to Page 481, par. 1

4. கம்யூனிசம் எடுத்துக் கூறுவது என்ன? அது ஜோசப் குக் என்பவரால் எவ்வாறு விவரிக்கப்பட்டிருக்கிறது? தற்போதைய மனுஷருடைய இருதயத்தின் நிலைப்பாட்டில் அது **முற்றிலும் நடைமுறைக்கு ஒத்துவராததாக** இருப்பது ஏன்? வேதாகமத்தில் கம்யூனிசம் கற்பிக்கப்பட்டிருக்கிறது என்று கூறுபவர்களுக்கு அளிக்கப்பட வேண்டிய பதில் என்ன? பல்வேறு இடங்களில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் கம்யூனிச காலனிகள் குறித்த சரித்திரம் என்னவாக இருந்திருக்கிறது? ஆதிகால கிறிஸ்தவ சபையினரால் கம்யூனிசம் முயற்சிக்கப்பட்டதா? மற்றும் அதன் விளைவுகள் என்ன? அப்போஸ்தலர்களுடைய போதனைகளும், நமது ஆண்டவருடைய மாதிரியும், போதனைகளும் கம்யூனிச நடைமுறைகளுக்கு முற்றிலும் முரணாக இருந்தது ஏன்? கம்யூனிசம், சுவிசேஷ யுகத்தின் நோக்கம் மற்றும் முறைமைகளுக்கு எதிராய் இருப்பது ஏன் என்பதைச் சுருக்கமாகக் கூறவும். **D P. 657 ¶ 3 - D P. 669 ¶ 1**

### அராஜகம் ஒரு பரிகாரம்

(5) What is Anarchy, and how is it the exact opposite of Communism? Why will it fail as a remedy? Page 481, par. 2, Page 482, par. 3

5. **அராஜகம்** என்பது என்ன? மேலும், அது கம்யூனிசத்திற்கு எவ்வாறு நேர்மாறாக உள்ளது? இது பரிகாரமாக இருப்பதற்குத் தவறிடுவது ஏன்? **D P. 669 ¶ 2 - D P. 671 ¶ 3**

## சோஷியலிசம் அல்லது பொதுவுடமை ஒரு தீர்வு

(6) What is Socialism, and how does it differ from Nationalism and Communism, respectively? What are its good features? Nevertheless, why will it fail to bring peace and prosperity? Page 482, par. 4, to Page 487, par. 1

6. **சோஷியலிசம்** என்பது என்ன? அது முறையே **தேசியமயம்** மற்றும் **கம்யூனிசத்திலிருந்து** எவ்வாறு வேறுபடுகிறது? அதன் நல்ல அம்சங்கள் என்னென்ன? இருப்பினும், அது சமாதானத்தையும் செழிப்பையும் கொண்டுவரத் தவறிடுவது ஏன்? **D P. 672 ¶ 1 - D P. 678 ¶ 1**

(7) What are Herbert Spencer's views regarding Socialism? Page 487, par. 2, 3

7. சோஷலிசம் குறித்து ஹெர்பர்ட் ஸ்பென்சரின் கருத்து என்ன? **D P. 678 ¶ 2 - D P. 679 ¶ 1**

(8) Describe the experiences of two notable socialistic communities. Page 487, par. 4, to Page 489, par. 3

8. இரண்டு குறிப்பிடத்தக்க சோஷலிச சமுதாயங்களின் அனுபவங்களை விவரிக்கவும். **D P. 679 ¶ 2 - D P. 682 ¶ 1**

## தேசியமயம் ஒரு தீர்வு

(9) To what other remedy is Nationalism closely related, and what are its claims? What has been the history of its theories put into practice? Page 490, par. 1, to Page 491, last par.

9. **தேசியமயம்** வேறு எந்தப் பரிகாரத்துடன் நெருங்கிய தொடர்புடையது? மற்றும் அதன் கோரிக்கைகள் என்ன? நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்ட அதன் கொள்கைகளின் சரித்திரம் என்னவாக இருந்திருக்கிறது? **D P. 683 ¶ 1 - D P. 685 ¶ 2**

## மெக்கானிக்குகளின் பொது கல்வி ஒரு தீர்வு

(10) Explain the proposition of the General Education of Mechanics, and its futility as a remedy. Page 492, par. 1, to Page 494, par. 1

10. **மெக்கானிக்குகளின் பொதுக்கல்வி** கூற்றையும், பயனற்ற அதன் தீர்வையும் விளக்கவும். **D P. 685 ¶ 3 - D P. 688 ¶ 2**

## ஒற்றை வரி தீர்வு

(11) What remedy is suggested in Henry George's Single Tax Theory? Page 494, par. 2, to Page 512, par. 1

11. ஹென்றி ஜார்ஜ் என்பவரின் "ஒற்றை வரி கோட்பாட்டில்" பரிந்துரைக்கப்பட்ட தீர்வு என்ன? **D P. 689 ¶ 1 - D P. 716 ¶ 1**

(12) What advantages has this theory of free land (except for taxes thereon), and what are its disadvantages? What country has proven the inability of this system to produce desired results? Page 512, par. 2, to Page 514, par. 3

12. **இலவச நிலம்** (அதன் மீதான வரியைத் தவிர) என்ற தத்துவம் கொண்டிருக்கும் அனுகூலங்கள் என்ன? மேலும், அதன் பிரதிகூலங்களும் என்ன? விரும்பப்பட்ட பலன்களைக் கொண்டுவருவதற்கு இந்த முறைமையின் இயலாமையை நிரூபித்திருக்கும் தேசம் எது? **D P. 716 ¶ 2 - D P. 720 ¶ 1**

## பிற நம்பிக்கைகளும் அச்சங்களும்

(13) What is a popular theory upon which the hope of Nominal Christianity is based? Why is this hope vain? What advantages has the Nominal Church possessed, and how has she used them? Page 515, par. 1, to Page 516, par. 2

13. பெயர் கிறிஸ்தவத்தின் நம்பிக்கையை அடிப்படையாகக் கொண்டிருக்கும் பிரபலமான கோட்பாடு என்ன? இந்த நம்பிக்கை விருதாவாயிருப்பது ஏன்? பெயர் சபை பெற்றிருந்த

அனுகூலங்கள் என்ன? மற்றும் அவைகளை அவள் எவ்வாறு பயன்படுத்தியிருக்கிறாள்? **D P. 720 ¶ 2 - D P. 722 ¶ 1**

## ஒரே நம்பிக்கை - நம்பியிருக்கிற "அந்த ஆனந்த பாக்கியம்"

(14) What is the true cause of all the trouble? If all the wealth of the world were distributed pro rata, what would be the condition in a few years? What is the only hope, the only remedy for the poor world? Page 517, par. 1, 2

14. இந்த அனைத்துப் பிரச்சனைகளுக்குமான **உண்மையான காரணம்** என்ன? உலகின் செல்வங்கள் அனைத்தும் விகிதாச்சாரப்படி பிரித்து விநியோகிக்கப்பட்டால், சில வருஷங்களிலேயே அதன் நிலை என்னவாக இருக்கும்? ஏழை உலக ஜனங்களுக்கான ஒரே தீர்வாக, ஒரே நம்பிக்கையாக இருப்பது என்ன? **D P. 723 ¶ 1 - D P. 724 ¶ 1**

(15) What will be the two-fold effect of the Great Time of Trouble? Page 518, par. 1

15. மகா உபத்திரவ காலத்தின் **இரண்டு விதமான** விளைவு என்னவாக இருக்கும்? **D P. 724 ¶ 2**

(16) How can the Kingdom of Heaven be established among men, when all other plans have failed? If its methods are explained in God's Word, why cannot they now be put into operation by mankind? Page 518, par. 2, to Page 519, par. 1

16. மற்றெல்லா திட்டங்களும் தோல்வியுற்றிருக்கும்போது, மனுஷர் மத்தியில் பரலோக இராஜ்யம் எவ்வாறு ஸ்தாபிக்கப்படக்கூடும்? அதின் வழிமுறைகள் தேவனுடைய வார்த்தையில் விளக்கப்பட்டிருந்தால், அவற்றை செயல்முறைப்படுத்த **தற்போது** மனுக்குலத்தால் கூடாதிருப்பது ஏன்? **D P. 725 ¶ 1-3**

(17) In addition to the establishing and continuing of the Kingdom by force, what present influences will be restrained during the Millennial Age? Page 519, par. 2

17. பலவந்தத்தினால் இராஜ்யம் ஸ்தாபிக்கப்பட்டு தொடர்ந்துகொண்டிருப்பதோடுகூட, ஆயிர வருஷ யுகத்தின்போது **தற்போதைய எந்த செல்வாக்குகள் கட்டுப்படுத்தப்பட்டிருக்கும்**? **D P. 726 ¶ 1**

(18) Will the reign of Christ be one of force alone? How will the judges of that day exercise judgment? What law and rule will be enforced during the Millennial reign of Christ? Page 519, par. 3, to Page 520, par. 3

18. கிறிஸ்துவின் அரசாட்சி அதிகாரம் உடையதாக மட்டுமே இருக்குமா? அந்த நாளின் நியாயாதிபதிகள் எப்படி நியாயந்தீர்ப்பார்கள்? கிறிஸ்துவினுடைய ஆயிர வருஷ அரசாட்சியின்போது **அமல்படுத்தப்பட** இருக்கும் **பிரமாணமும், சட்டமும்** என்ன? **D P. 726 ¶ 2 - D P. 727 ¶ 3**

## தேவ ஜனத்தின் மிகச் சரியான மனோபாவம்

(19) How must we, who see things in their true light, conduct ourselves under present conditions? Page 521, par. 1. to Page 525, par. 1

19. காரியங்களை அதன் **உண்மையான வெளிச்சத்தில் பார்க்கக்கூடிய நாம்,** தற்போதைய சூழ்நிலைகளின்கீழ் எவ்வாறு நடந்துகொள்ள வேண்டும்? **D P. 728 ¶ 1 - D P. 733 ¶ 2**

(20) Which of two alternatives is inevitable under the present social law, as shown in Scripture? What lesson will be taught both rich and poor in the great struggle with which this Age will end? Page 525, par. 2; Page 526

20. வேதவசனத்தில் காட்டப்பட்டுள்ளபடி, தற்போதைய சமூக சட்டத்தின்கீழ் தவிர்க்க இயலாததாக இருக்கும் இரண்டு மாற்றுக் காரியங்களில் ஒன்று என்ன? மகா போராட்டத்தோடு இந்த **யுகம்** முடிவடையும்போது, ஐசுவரியவான்கள், ஏழைகள் ஆகிய இருவருக்கும் கற்பிக்கப்படும் பாடம் என்ன? **D P. 734 ¶ 1 - D P. 735 ¶ 1**

# வேத ஆராய்ச்சி
# தொகை நூல் IV மீதான
# பெரோயரின் கேள்விகள்

## அத்தியாயம் 11

## "அர்மகெதோன் யுத்தம்"

(1) Why are so many symbols used in Scripture to describe the great conflict of the Day of Vengeance? Page 527
1. **நீதியைச் சரிக்கட்டும் நாளின்** மகா போராட்டத்தை விவரிக்க வசனத்தில் அநேக அடையாளங்கள் பயன்படுத்தப்பட்டிருப்பது ஏன்? **D P. 737 ¶ 1 - D P. 738 ¶ 1**

(2) Where is it referred to as a Battle? Page 528, par. 1
2. இது ஒரு **யுத்தம்** என்று எங்கு குறிப்பிடப்பட்டிருக்கிறது? **D P. 738 ¶ 2**

(3) Where is this great time of trouble likened to an earthquake? Page 528, par. 2
3. இந்த மகா உபத்திரவ காலம் எந்த வசனத்தில் ஒரு பூமியதிர்ச்சிக்கு ஒப்பிடப்பட்டிருக்கிறது? **D P. 738 ¶ 3**

(4) What is the significance of the symbol fire, in this connection, and where is it used in Scripture? Page 528, par. 3
4. இது தொடர்பாக, **அக்கினி** என்ற அடையாளத்தின் அர்த்தம் என்ன? மற்றும் அது வசனத்தில் எங்கு பயன்படுத்தப்படுகிறது? **D P. 738 ¶ 4**

(5) Where is the time of trouble described as a "whirlwind," a "tempest of hail," and a "destroying storm"? Page 528, par. 4, 5
5. உபத்திரவ காலம், **"சூழல் காற்று"** என்றும், **"கல் மழை"** என்றும், **"சங்காரப் புசல்"** என்றும் எங்கு விவரிக்கப்பட்டிருக்கிறது? **D P. 738 ¶ 5 - D P. 739 ¶ 2**

(6) How do we know that these statements are not to be interpreted literally? Page 529, par. 1
6. இந்த அறிக்கைகள் எல்லாம் சொல்லர்த்தமாக விளக்கப்படக்கூடாது என்பதை நாம் எவ்வாறு அறிவது? **D P. 739 ¶ 3**

### விரைவில் சம்பவிக்கப்போகும் பேராபத்தைக்குறித்த இரண்டு குறிப்பிடத்தக்க நிழல்கள்

(7) Though words of passion and fierce argument will be used as weapons in this great battle, do we understand that it will end with these? Describe the great catastrophe in the end of the Jewish Age, which typified the great Time of Trouble in the end of the Gospel Age. Page 529, par. 2, to Page 530, par. 1
7. இந்த மகா யுத்தத்தில் அடங்காக் கோபமான வார்த்தைகளும், விவாதமும், ஆயுதங்களாகப் பயன்படுத்தப்படுவதாக இருந்தாலும், இதோடுகூட அது முடிந்துவிடும் என்று நாம் புரிந்துகொள்ளலாமா? சுவிசேஷ யுகத்தின் முடிவில் நிகழும் மகா உபத்திரவ காலத்திற்கு அடையாளமாக இருந்திட்ட, யூத யுகத்தின் முடிவில் நிகழ்ந்த பேராபத்தை விவரிக்கவும். **D P. 739 ¶ 4 - D P. 740 ¶ 1**

(8) Have times so changed as to make such atrocities an impossibility in our day? Page 530, par. 2, 3
8. நம்முடைய காலத்தில் இதுபோன்ற பேரழிவுகள் நடக்காமல் இருப்பதற்கு காலங்கள் மாறியிருக்கிறதா? **D P. 741 ¶ 1, 2**

(9) What was the "great earthquake" referred to in Revelation, and what conditions led up to this terrible outburst of a nation's wrath? Page 531, par. 1, to Page 533, par. 3
9. வெளிப்படுத்தின விசேஷத்தில் **"மாபெரும் பூமியதிர்ச்சி"** என்னவாக இருந்தது? மேலும், ஒரு தேசத்தினுடைய கோபாக்கினையின் இந்தப் பயங்கரமான வெடிப்புக்கு வழிவகுத்த சூழ்நிலைகள் என்ன? **D P. 741 ¶ 3 - D P. 744 ¶ 5**

(10) Do we see any conditions in the world today similar to those which culminated in the French Revolution? Page 533, par. 4; Page 534, par. 1

10. பிரெஞ்சு புரட்சியின் உச்சநிலையைப் போன்றே இன்று உலகில் ஏதேனும் சூழ்நிலைகளை **நாம் காண்கிறோமா**? **D P. 744 ¶ 6 - D P. 745 ¶ 1**

(11) What were the peculiar characteristics of the French Revolution, as respects knowledge and liberty? Page 534, par. 2, 3

11. அறிவு மற்றும் சுயாதீனத்தைப் பொறுத்தவரை, பிரெஞ்சு புரட்சியின் விசித்திரமான குணவியல்புகள் என்னவாக இருந்தன? **D P. 745 ¶ 2 - D P. 746 ¶ 1, 2**

(12) While we see similar causes operating today, what must be our conviction as to the ultimate results predicted in prophecy? How trivial a circumstance is liable to set on fire the present social structure, as illustrated in the French Revolution? Page 534, par. 4, to Page 535, par. 1

12. இதேவிதமான காரியங்கள் இன்று செயல்படுவதை நாம் காண்கையில், தீர்க்கத்தரிசனத்தில் முன்னுரைக்கப்பட்ட இறுதி விளைவுகள் குறித்து நம்முடைய நம்பிக்கை என்னவாக இருக்க வேண்டும்? பிரெஞ்சு புரட்சியில் எடுத்துக்காட்டப்பட்டுள்ளபடி, தற்போதைய சமூக அமைப்பின்மீது அக்கினியைக் கொளுத்தப் பொருத்தமான மிகத் துல்லியமான சந்தர்ப்பம் என்ன? **D P. 746 ¶ 3 - D P. 747 ¶ 1**

(13) What was the attitude of the aristocracy at the time of the revolutionary outbreak? And are conditions similar today among the higher classes of society? Page 535, par. 2, to Page 536, par. 3

13. புரட்சி வெடித்த சமயத்தில் இராஜ வம்சத்தினரின் மனோநிலை என்னவாக இருந்தது? மேலும், சமூதாயத்திலுள்ள **உயர்குலத்தாரின்** மத்தியில் இன்று இதேபோன்ற சூழ்நிலைகள் நிலவுகின்றதா? **D P. 747 ¶ 2 - D P. 748 ¶ 2**

(14) What Divine Law was most marked in the great tribulation upon Israel and in the French Revolution, and will be more terribly manifested in the trouble coming upon Christendom? Page 536, par. 4, to Page 539, par. 3

14. இஸ்ரயேலர் மீதும், பிரெஞ்சு புரட்சியிலும் காணப்பட்ட மாபெரும் உபத்திரவத்தில் மிகவும் குறிப்பிடத்தக்கதாக இருந்த தெய்வீகப் பிரமாணம் என்ன? மற்றும், கிறிஸ்தவ இராஜ்யத்தின்மேல் வரப்போகும் உபத்திரவத்திலும் மிகவும் **கடுமையானதாக** வெளிப்படுத்தப்படப்போகும் பிரமாணம் என்ன? **D P. 749 ¶ 1 - D P. 753 ¶ 1**

(15) While there is no hope that this trouble can be averted, what directions are given in the Scriptures to such individuals as would hide from the coming storm? Page 540, par. 1 to 3

15. இந்த உபத்திரவத்தைத் தவிர்க்கக்கூடிய நம்பிக்கை ஏதும் இல்லை என்றாலும், வரப்போகும் புயலுக்கு தனிப்பட்டவர் ஒளித்துக்கொள்ளும்படிக்கு வேதவசனங்களில் கொடுக்கப்பட்டிருக்கும் வழிமுறைகள் என்ன? **D P. 753 ¶ 2 - D P. 754 ¶ 1**

(16) Why will the Battle of the Great Day be the greatest Revolution the world has ever seen? Page 541, par. 1

16. மகா நாளின் யுத்தமானது, இதுவரை உலகம் கண்டிராத மாபெரும் புரட்சியாக இருக்கப்போவது ஏன்? **D P. 754 ¶ 2**

(17) What are the different progressive stages of development in the Battle of the Great Day, and what is its general character? Page 541, par. 2

17. மகா நாளின் யுத்தத்தில், அதன் வளர்ச்சியில் காணப்படும் பல்வேறு படிநிலைகள் என்ன? மேலும் அதன் பொதுவான தன்மை என்ன? **D P. 755 ¶ 1**

## கர்த்தருடைய மாபெரும் சேனை

(18) Is it probable that the "Lord's Great Army" refers to the saints, the "soldiers of the cross"? Page 542, par. 1, to Page 543, par. 1

18. "கர்த்தருடைய மாபெரும் சேனை" என்பது, "சிலுவை வீரர்களாகிய" பரிசுத்தவான்களைக் குறிக்கும் என்பது உண்மையா? **D P. 755 ¶ 2 - D P. 757 ¶ 1**

(19) Where is the prophetic description of this Great Army given in the Scriptures? Page 543, par. 2, 3

19. இந்த மாபெரும் சேனையைக் குறித்த தீர்க்கத்தரிசன விளக்கமானது வேதவசனங்களில் எங்குக் கொடுக்கப்பட்டுள்ளது? **D P. 757 ¶ 2 - D P. 758 ¶ 1**

(20) Where can there be found such a mighty host, which will dare to set itself in battle array against the conservative forces of Christendom? Page 544, par. 1, to Page 546, par. 1

20. கிறிஸ்தவ தேசங்களின் பழமைவாத சக்திகளுக்கு எதிராகப் போரில் ஈடுபடத் துணியக்கூடிய அத்தகைய வலிமைமிக்க சேனையை எங்கே காணலாம்? **D P. 758 ¶ 2 - D P. 761 ¶ 1**

(21) What are the indications that soon the "voice" of command will be given to this Great Army? But what event must precede this great catastrophe? Page 546, par. 2, to Page 548, par. 1

21. இந்த மாபெரும் சேனைக்கு விரைவில் கொடுக்கப்படும் "சத்தத்திற்கான" அறிகுறிகள் என்ன? ஆனால் இந்த மாபெரும் பேரழிவிற்கு முன் சம்பவிக்க வேண்டிய நிகழ்வு என்ன? **D P. 761 ¶ 2 - D P. 763 ¶ 3**

(22) What is the Apostle's illustration with respect to the manner in which the New Order will be born? Page 548, par. 2

22. புதிய ஒழுங்கு பிறக்கும் விதம் குறித்து அப்போஸ்தலரின் விளக்கம் என்ன? **D P. 764 ¶ 1**

(23) Why will this Time of Trouble appear all the more "strange" and peculiar to those who do not understand the change of Dispensations? Page 548, par. 3, to Page 549, par. 2

23. யுக மாற்றங்களைப் புரிந்துகொள்ளாதவர்களுக்கு இந்த உபத்திரவ காலம் மிகவும் "விசித்திரமாகவும்" விநோதமாகவும் காணப்படப்போவது ஏன்? **D P. 764 ¶ 2 - D P. 765 ¶ 2**

(24) What is the intimation in Scripture that there may be others outside the revolting hosts of Christendom, who will form a part of the Lord's Great Army? Page 549, par. 3, to Page 550, par. 3

24. கிறிஸ்தவ மண்டலத்தின் கலகம் நிறைந்த படைகளையும் மிஞ்சி, கர்த்தருடைய மாபெரும் சேனையின் ஒரு பகுதியை உருவாக்குவதற்கு, வெளியே சிலர் இருப்பார்கள் என்பதைக் குறித்து வேதவசனத்தில் சுட்டிக்காண்பிக்கப்படுவது என்ன? **D P. 766 ¶ 1 - D P. 767 ¶ 1**

## இதுவரை சம்பவித்திராத இந்த யுத்தத்தின் நிலைமைகள்

(25) In what Psalm are the unprecedented conditions of this great Battle graphically described? Page 551, par. 1

25. இதுவரை சம்பவித்திராத இந்த மகா யுத்தத்தின் நிலைமைகள் குறித்து எந்தச் சங்கீதத்தில் சித்திரத்தைப்போல் விவரிக்கப்பட்டுள்ளது? **D P. 767 ¶ 2**

(26) Why will it be impossible to re-establish the present Social Order? Page 551, par. 2, to Page 552, par. 1

26. தற்கால சமூக அமைப்பை மறுபடியும் ஸ்தாபிப்பது என்பது கூடாத காரியமாய் இருக்கப்போவது ஏன்? **D P. 768 ¶ 1 - D P. 769 ¶ 1**

## யாக்கோபின் இக்கட்டுக் காலம்

(27) While this distress will come upon all nations, upon what people will be the final blast of the great tempest, as indicated by the Prophets? Page 552, par. 2, to Page 554, par. 3

27. இந்தத் துன்பம் எல்லா ஜாதிகள் மேலும் வருவதாயிருக்கையில், தீர்க்கத்தரிசிகளால் குறிப்பாகத் தெரிவிக்கப்பட்டதுபோன்று இந்த மகா புயலின் **இறுதிகட்ட** வெடிப்பு எந்த ஜாதிகள்மேல் வரும்? **D P. 769 ¶ 2 - D P. 772 ¶ 2**

(28) In the midst of Jacob's trouble, how will Jehovah reveal Himself as Israel's Defender and Deliverer? Page 555. par. 1. to Page 558, par. 2

28. யாக்கோபினுடைய இக்கட்டின் மத்தியில், தேவன் தம்மை இஸ்ரயேலரின் பாதுகாவலாளராகவும், விடுவிப்பவராகவும் எவ்வாறு வெளிப்படுத்துவார்? **D P. 773 ¶ 1 - D P. 777 ¶ 2**

## கிரீடமா அல்லது ஜனங்களா?

(29) What are some of the statements of the public press with respect to what the armies of Europe may be asked to choose between in the near future? And how is this in accord with our views of the "Lord's Great Army"? Page 559, par. 1, to Page 561, par. 1

29. ஐரோப்பாவின் சேனைகள் தெரிந்துகொள்ளும்படியாக எதிர்காலத்தில் என்ன கேட்கப்படலாம் என்பது குறித்து பொது பத்திரிக்கை வெளியிட்ட சில அறிக்கைகள் என்ன? மேலும், "கர்த்தருடைய மாபெரும் சேனை" குறித்த நம்முடைய கண்ணோட்டத்திற்கு இது எவ்வாறு இசைந்திருக்கிறது? **D P. 778 ¶ 1 - D P. 781 ¶ 1**

---

# வேத ஆராய்ச்சி
# தொகை நூல் IV மீதான
# பெரேயரின் கேள்விகள்

## அத்தியாயம் 12

### "நமது கர்த்தரின் மாபெரும் தீர்க்கத்தரிசனம்"

(1) Where is found in Scripture one of the most remarkable prophecies respecting the "Time of the End," one which was uttered by our Lord Jesus Himself? What was the evident object of this prophecy? How were all of our Lord's previous references to His death and the apparent failure of His cause received by His Apostles? And how did this attitude on the part of His disciples lead up to the three points not yet clear in their minds? Page 563, to Page 564, par. 1.

1. நம்முடைய ஆண்டவர் இயேசுதாமே கூறின "முடிவு காலம்" குறித்த மிக முக்கியமான தீர்க்கத்தரிசனங்களில் ஒன்று வேதவசனத்தில் எங்குக் காணப்படுகிறது? இந்தத் தீர்க்கத்தரிசனத்தின் வெளிப்படையான/திட்டவட்டமான **நோக்கம்** என்னவாக இருந்தது? நமது ஆண்டவருடைய மரணம் குறித்த முந்தைய அனைத்துக் குறிப்புகள் மற்றும் அவருடைய நோக்கங்கள் அல்லது திட்டங்களானது தோல்வியைத் தழுவினதுபோன்ற ஒரு தோற்றத்தை ஏற்படுத்தியது அப்போஸ்தலரால் எவ்வாறு எடுத்துக்கொள்ளப்பட்டது? மேலும் அவருடைய சீஷர்களின் தரப்பில் காணப்பட்ட இந்த மனநிலையானது, அவர்களுடைய மனதில் இன்னுமே தெளிவாகாத **மூன்று காரியங்களுக்கு** எவ்வாறு வழிவகுத்தது? **D P. 784 ¶ 1 - D P. 785 ¶ 1**

### மூன்று கேள்விகள்

(2) What were the three questions asked by the disciples, and for whom were our Lord's replies undoubtedly intended? Page 564, par. 3; Page 565, par. 1

2. சீஷர்கள் கேட்ட மூன்று கேள்விகள் என்ன? மேலும், சந்தேகத்திற்கு இடமின்றி நமது ஆண்டவருடைய பதில்கள் யாருக்காக **இருந்தன**? **D P. 785 ¶ 2-4**

### கள்ளக் கிறிஸ்துக்களுக்கு எச்சரிக்கையாயிருங்கள்

(3) What was the Master's first warning to His disciples, as expressed in Matt. 24:4, 5? Was this suggestion important, as proven by subsequent history? Page 565, par. 2, 3

3. மத்தேயு 24:4-5-ஆம் வசனங்களில் வெளிப்படுத்தப்பட்டுள்ளபடி, தம்முடைய சீஷர்களுக்குப் போதகர் அளித்த முதல் எச்சரிக்கை என்ன? பின்வரும் சரித்திரத்தின்மூலம் நிரூபிக்கப்பட்டதுபோன்று, இந்த ஆலோசனை **முக்கியமானதாக** இருந்ததா? **D P. 786 ¶ 1, 2**

### பதினெட்டாம் நூற்றாண்டின் சரித்திரத்தைக் குறித்த சுருக்கமான முன்னறிவிப்பு

(4) How do verses 6 to 8 in Matt. 24 apply? In which verses is the history of the Church separated from that of the world? Page 566, par. 1, to Page 567, par. 1

4. மத்தேயு 24-ஆம் அதிகாரத்தில் 6 முதல் 8 வரையிலான வசனங்கள் எவ்வாறு பொருந்தும்? சபை, உலகத்திலிருந்து பிரிக்கப்பட்டது குறித்த சரித்திரமானது எந்த வசனங்களில் கொடுக்கப்பட்டுள்ளது? **D P. 787 ¶ 1 - D P. 788 ¶ 2**

### உலகளாவிய - சுவிசேஷத்தின் சாட்சி

